# திருவள்ளுவர்
# அறிவு ஆலயம்
## (Reason of Temple)

★

ஆசிரியர் :

**ப. இராமசாமி,**

நெல்லை.

★

"குறள் அமுது" வெளியீட்டகம்
125, தெற்கு வெளி வீதி,
மதுரை.

முதற் பதிப்பு: மே, '60.

விலை ரூ. 1—4—0.

அச்சிட்டோர்:
கோல்டன் பிரஸ், மதுரை.

# முகவுரை.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

உலகில் தோன்றிய அறிஞர் பலர். அவர்களில் முதல் வரிசையில் முதலிடம் பெறுபவர் திருவள்ளுவர்.

உலகில் 2000 மொழிகள் பேசப்படுவதாகவும், அவற்றுள் 999-க்குத் தான் மொழியென்பதற்குரிய அம்சங்கள் இருப்பதாகவும், அவற்றுள்ளும் 500 குறிப்பிடத் தக்கவையென்பதாகவும், அந்த 500 மொழிகளில் 250 சிறந்தன என்பதாகவும் மொழி வரலாற்றாசிரியர்கள் வகுத்துக் கூறுகின்றார்கள்.

இவ்வாறு வகுத்தும், தொகுத்தும் பொறுக்கியெடுத்த மொழிகளில் உள்ள நூல்களைப் பரிசீலனை செய்து தேர்ந்தெடுத்ததில் 12 நூல்கள் சிறந்தன என மொழி வல்லுநர் முடிவு கட்டினராம். அப் பன்னிரண்டு நூல்களில் 'திருக்குறள்' ஒன்றாகத் திகழ்கிறதாம்.

எனவே, அகில உலக மொழிகளிலுள்ள நூல்களிலிருந்து பொறுக்கியெடுத்த 12 நூல்களில் திருக்குறள் ஒன்று என்றால், அது உலகமறிந்த நூல் என விளங்குகிறது அல்லவா!

மேலும், ஒரு மொழியில் தோன்றிய நூல் வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு அம் மொழி மக்களால் படிக்கப்படுவதும் அந் நூலின் சிறப்புக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். திருக்குறள் 83 சிறந்த மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறதென்றால் அதன் உயர்வுக்கு வேறு சான்றும் வேண்டுமோ!

வள்ளுவர் சொல்லும் பொருளும் பொன்போன்றது; மாசற்ற பொன் போன்றது. அதில் எந்த இடத்திலும் எந்தவிதமான மாசும் காண முடியாது என்று அறிஞர்கள் அறுதியிட்டுக் கூறியிருக்கின்றார்கள்.

திருக்குறளுக்குப் பின் தோன்றிய தமிழ் நூல்களில் திருக்குறட் கருத்துக்கள் ஆங்காங்கே பொதியப் பெற்றிருக்கின்றன. திருக்குறட் சாரம் பெறாத தமிழ் நூல்கள் இல்லையெனலாம்; இருந்தால் அவை உயிரற்றவையாகவேயிருக்கும்.

வள்ளுவர் காலம் கிறிஸ்துவுக்கு முற்பட்டது. பெரியோர்கள் வரலாறுகளை எழுதிவைக்கும் வழக்கமில்லாக் காலம். பிற் காலத்தவர்கள் அவரைப் பற்றிப் பல கதைகள் எழுதியுள்ளனர். அக் கதைகள் உண்மையற்றவைகள் என்று ஆராய்ச்சி முகத்தால் நிலை நிறுத்த முயன்றவர்களும் நேர்மையாக அதைச் செய்தார்கள் என்று கூறுவதற்கில்லை.

வள்ளுவர் குறளைப்பற்றியும், அவர் வரலாற்றைப்பற்றியும் பல அறிஞர்கள் எழுதியிருக்கின்றனர். பதிப்பகங்கள் அவற்றைப் பதிப்பித்துப் பொருள் திரட்டிக் கொண்டன. ஆனால் அப் பேரறிவின் சிகரமான வள்ளுவருக்கு நன்றி தெரிவிக்க ஒரு வழியும் செய்யவில்லை.

ஏதோ, இந்த 1960-ல் சில நல்ல சிந்தனைகள் உருவாகியிருப்பது தவிர, இதற்கு முன்பு வள்ளுவர் பேரால் செய்த தெல்லாம் தம் தம் சொந்த நலனுக்கே பயன்பட்டன.

இன்றையத் தமிழகத்தில் இருக்கும் இனப்பிரிவுகளை முன் வைத்துக் கொண்டும், தாமும் அவ்வினப்பிரிவுகளில் ஒன்றைச் சேர்ந்தவராகக் காட்டிக்கொண்டும் வள்ளுவரைத் தம் இனமாகச் சேர்க்கப் பார்க்கும் தமிழறிஞர்கள் சிலர் உளர்.

வள்ளுவர் மனித இனம். அவர் தனக்குக் கீழான ஒரு ஜாதி இருப்பதாகக் கருதுபவர் அல்லர்; அவ்வாறே தனக்கு மேலான ஜாதி இருப்பதாகவும் கொள்வதில்லை.

யானும் அக் கொள்கை யுடையவனே. எனவே அவர் என் இனம்; யான் அவர் இனம்; நீங்களும் இக்கொள்கை யுடையவர்களானல் நாம் எல்லோரும் ஓர் இனமே; மனித இனமே.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'' (தி. கு. 972)

வள்ளுவருக்குப் பின் தோன்றிய புலவர்கள் குறட்கருத்துக்களை ஓரளவு பயன்படுத்திக் கொண்டாலும், பழைய மரபுகளில் உள்ள மாசுகளைக் களைந்து தூய்மை செய்யும் துணிவு அவர்களிடம் காணப்படவில்லை. அது அவர்கள் செய்த நூல்களில் துலங்குகிறது.

வள்ளுவரோ, அவர் காலத்திற்கு முன் தோன்றிய பல வகைப்பட்ட நூல்களையும் கற்றுணர்ந்தும், தம் மதி நுட்பம் நேர்மை, நடுவு நிலைமை என்னும் ஆற்றல்களைப் பயன்படுத்தி, நியாயத்திற்கும், பகுத்தறிவுக்கும் பொருந்தாத கருத்துகளை யெல்லாம் துணிந்து அகற்றிவிட்டு,

''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து'' (தி. கு 645)

என்னும் விதிக்கிணங்க எந்த நியாயவாதியும், எந்தப் பகுத்தறிவு வாதியும், எந்த மத வாதியும் குறை கூற இடமில்லாத முறையில் ''திருக்குறள்'' என்ற ஒப்பற்ற நூலைச் செய்திருக்கின்றார். தமிழ் மக்களுக்கு இதுவே– நிறை மொழிமாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழியாகும்.'' வேறு நூல்களை நோக்குவது வேண்டப்படாத ஒன்று. அதனால் தான் சாமி சகஜானந்தம் அவர்கள்,

''எந்த நூல் தோன்றுவதற்குச் சங்கம் நிறுவப்பட்டதோ
எந்த நூல் தோன்றியதும் சங்கம் குலைந்ததோ

அந்த நூல்தான் திருக்குறள்—
அதுதான் தமிழர் வேதம்''

—என்று மாபெரும் சபையில் திருவுளம் பற்றியிருக்கின்றார்கள்.

வள்ளுவர் தம் நூலைச் சமயக் கொள்கைகள் சிறிதும் கலக்க விடாமல் செய்திருக்கின்றார். அதனால்தான்,

''சமயக் கணக்கர் மதிவழிசெல்லாது உலகியல்கூறிப்
பொருளிது வென்ற பொய்யிற் புலவன்''

-என்று போற்றப் பெற்றிருக்கின்றார்.

சமயங்கள் செல்வாக்கு இழக்கும் காலம் வரும் என்பதைத் தீர்க்கத் தரிசன முறையில் உணர்ந்து அவ்வாறு செய்திருக்கின்றார் போலும்.

வள்ளுவர் மொழிப் புலமை, கலைப் புலமை முதலிய பல புலமைகளுடன், உலக அரங்கின் நாடக மேடையில் பலதிறப் பட்ட மக்களின் பல்வேறு உணர்ச்சிகளையும் உள்ளத்தால் உணர்ந்து, உரையால் நடிக்கும்—சிறந்த நடிப்புப் புலமையும் உடைய மகானுபவன். இந்த வகையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒரு தனியர். மக்களது உணர்ச்சிகளையும், செயல்களையும் மட்டுமல்ல, அவர்கள் நினைவுகளையும் அளந்தறியும் ஆற்றல் வாய்ந்தவர் என்று ஒரு புலவர் வியந்து கூறுகின்றார்:—

''மாலுங்குறளாய் வளர்ந் திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந் தளந்தான் — வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள் வெண்பாவடியால் வையத்தார்
உள்ளுவ வெல்லா மளந்தா ரோர்ந்து''

திருக்குறளின் ஒரு பகுதியாகிய பொருட்பால் அரசியல் நுணுக்கம் கூறுவது. அரசாங்கத்தை நடத்தும் அமைச்

சர்களும், ஆலோசனைக் குழுவினரும் அப் பகுதியினை யேனும் கசடறக் கற்ருல், இப்போது ஆங்காங்கு காணப் படும் இடர்ப்பாடுகளுக்கு விலக்குகளும், விதிகளும் கண்டு மகிழ்வர். செயல்படுத்தினுல் சிக்கல்கள் சீர்படும்.

பொருட்பால்—அரசியல் வாழ்க்கையில் — ஆள்பவர்களும் ஆளப்படுபவர்களும் வாழவேண்டிய விதிகளை அடக்கிக் கொண்டிருப்பதால் அரசன் முதல் ஆண்டிவரை ஒவ்வொரு வருக்கும் அதில் போதனையுண்டு. அறத்துப் பாலிலும் காமத்துப் பாலிலும் தனி வாழ்க்கைக்குரிய விதிகள் விரி வாய்க்கூறப்பட்டிருக்கின்றன. எனவே திருக்குறள் வாழ்க்கை விதிகள் அமைந்துள்ள ஒரு மாபெரும் களஞ்சிய மாகும். அனுபவக் களஞ்சியம் எனினும் பொருந்தும்.

ஊன்றிப்படிக்கும் இயல்புடையவர்களுக்கு ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு விதமான சக்தியைக் கொடுக்கும் 'டானிக்' ஆகும். ஊசியின் மூலம் ஏற்றும் 'டானிக்' போல, 25 அல்லது 30 எழுத்துக்களைக்கொண்ட ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு மருந்து அடங்கிய ஊசி எனலாம்.

இவ்வளவு பெரிய நன்மைதரும் நூல் தந்த வள்ளு வருக்கு தமிழ் மக்களாகிய நாம் தகுந்த நன்றி செலுத்தி யிருக்கிறோமா? "செய்ந்நன்றியறிதல்" என்னும் அதிகா ரத்தைப் படித்திருக்கிறோமே! அதன் பொருளுணர்ந்து, வள்ளுவருக்கு நன்றி செலுத்த வேண்டாமா? பின் வரும் பகுதிகளைப்படித்து யான் கூறும் நன்றி சரியானது என்ருல் ஒத்துழையுங்கள், வெற்றி பெறுவோம்,

# திருவள்ளுவர் அறிவு ஆலயம்.

## சிந்தனை தோன்றிய விதம்.

நான் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், பொது [illegible] திருக்குறளைப் படித்ததுண்டு. சென்ற மகா யுத்தத்தில், நான் இராணுவத்தில் ஒரு பயிற்சியாளனாகப் பணி [illegible] வந்த நிலையில் - உலகின் பலதுறைப்பட்ட விவகாரங்களை அறிந்துகொள்ளவும், சில நல்லொழுக்கங்களைக் கைக் [illegible]ளவும் வசதியிருந்தது. 6½ ஆண்டு கால இராணுவ [illegible] அவைகளில் வளர்ச்சியடையவும், அவற்றில் நிலை [illegible] பயன்பட்டது.

அக்காலத்தில் என் ஓய்வு நேரப்பணியாக — திருக்குறளை [illegible]யும், [illegible]பிளையும், கீதையையும் படிப்பதுண்டு. திருக்குறளில் [illegible] தோய்ந்தது. அதனைச் சிறப்பு முறையில் படிக்க [illegible]னித்தேன்.

[illegible]னும் என் மொழியறிவுக் குறைவினால் திருக்குறட் [illegible] நன்கு பொருள் அறிந்து பயிலக்கூடவில்லை. அத [illegible] [illegible]லத்தை மட்டும் படித்து மனனம் செய்து வரலா [illegible]. அது திருவள்ளுவருக்கு எங்கெல்லாம் சிறப்பு [illegible] — கழகங்கள் இருக்கின்றன என்று விசாரணை [illegible] தூண்டிற்று.

[illegible] 1948-ல் இராணுவத்திலிருந்து திரும்பிய சமயம் [illegible]ல் "செல்வம் சிறுவர் அறிவுக் கழகம்" என்னும் [illegible] ஒரு கழகம் அமைத்து, சிறுவர்களுக்கான ஒரு [illegible] செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. அப்பணியில் [illegible] போன்ற வேறு சில நண்பர்களும் முன் வந்த

னர். அக் காலத்தில் — தான் வள்ளுவருக்கு நம் நாட்டில் நம் காலத்திலேயே, ஒரு சிறந்த ஆலயம் கட்டிவிட வேண்டு மென்ற திண்ணமான எண்ணம் என் மனதில் உதித்தது. அதன் பின் என் அன்னையாரும் அவ்வாறு செய்யுமாறு ஆணை யிட்டனர்.

அன்னையின் ஆணையாவது:— மகனே! நம் நாட்டில் - மக்கள் மனதைப் பக்குவப்படுத்தி நல்லெண்ணங்களை உரு வாக்கும் நோக்குடன் கோவில்களும் கோபுரங்களும் உருவச் சிலைகளும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்த் திருக்கின்றேன்; பணிந்திருக்கின்றேன். எனினும் என் மனது நிறைவடைந்ததில்லை. வள்ளுவப் பெருமானின் ஆலயத்தையோ, உருவச் சிலையையோ யான் கண்டதில்லை. மக்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகளை — ஒப்பற்ற நெறிகளை — மாந்தர் அனைவருக்கும் பொருந்தும் முறையில் வகுத்துத் தந்த அண்ணல் வள்ளு வருக்கு ஒரு ஆலயமோ, உருவச் சிலையோ, இல்லாதிருப்பது ஒரு பெருங் குறையாகும். அக் குறையை இன்னும் விட்டு வைத்திருப்பது நல்லதல்ல. நீயேனும் அம்மகானுபவனுக்கு ஒரு ஆலயம் அமைத்து மக்களுக்கு நல்லுணர்வு ஏற்படும் வகையில் அதைப் பயன்படுத்து. வள்ளுவருக்குச் செய்யும் நன்றி அதுவே. அதனால் உன் புகழ் உயரும்; நாடும் நன்மையடையும்.

இவ்வாறு என் அன்னை திருமதி மாரியம்மை — பழனி (நெல்லை) அவர்கள் 1949-ம் ஆண்டில் எனக்கு ஆணையிட்ட னர்.

அவ்வெண்ணம் என் உள்ளத்தில் வேரூன்றி செழித்து விட்டமையால் அது முதல் யான் செல்லுமிடங்கள் தோறும் "உலகம் போற்றும் குறள் தந்த பேரறிவாளருக்கு ஆலயம் கட்டத் தகுந்த இடம் இதுவாகுமா? அது வாகுமா?" என் னும் விசாரணை என் உள்ளத்தில் நடந்துகொண்டேயிருந் தது.


யான் 1953-54ல் தமிழகம், கன்னடம், கேரளம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்ட சமயம், 1954ல் குமரி முனைக்குச் செல்ல நேர்ந்தது. காந்தியடிகளின் அஸ்தி கரைக்கப்பட்டதை நினைவுறுத்தும் பீடத்தண்டை நின்றேன்.



அங்கு, முக்கடலும் சேர்ந்து முழக்கமிடும் தொனி நமது தமிழ் மூவரசரையும் நினைப்பூட்டிற்று. அக் கடலின் நீர் என் பாதங்களைக் கழுவும் நிலையில் யான் வடக்கு நோக்கி நின்றேன். இமயமும் குமரியும் ஒன்றையொன்று பார்த்து ஏதேதோ பேசுவதுபோல் மனம் காட்சியளித்தது. வள்ளுவருக்கு ஆலயம் கட்டத் தகுந்த இடம் குமரிப் பகுதியே என்னும் நிச்சயம் அப்போது ஏற்படலாயிற்று. மேலும், என் வாழ்நாளில் வள்ளுவருக்கு ஆலயம் கட்டித்தீர வேண்டுமென்னும் அசைக்க முடியாத உறுதியும் அது சமயம் அமைந்தது.

அறிவாலயம் அமைக்க வேண்டுமென்னும் எண்ணத்தை உற்றி செய்த குமரி நாட்டை என் வாழ்நாளெல்லாம் போற்றுவேன். வளமான சிந்தனையை எனக்குத் தந்த அந்த அன்னை குமரி தேவிக்கு என் வணக்கம்.

திருவள்ளுவர் அறிவு ஆலயம் அமைவதற்குத் தகுந்த இடம் கன்னியாகுமரிப் பகுதியே யென்று யான் நிச்சயித்




ததை — அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான வேறு சில காரணங்களும் உள்ளன. அவையாவன:—

### 1. நாட்டுப் பிரிவினை கோரும் அன்பர்கள் மனதைச் சற்று சாந்தி செய்யும்:

"வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது" என்பது அவர்கள் முறையீடு. திருவள்ளுவர் அறிவு ஆலயத்தைக் கன்னியா குமரியில் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம், தம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் பணம் ஒதுக்கி, மாகாண

அரசாங்கத்திற்கும் முழு அனுமதியும் கொடுத்து, சிறந்த முறையில் அதை ஆவற்குத் தம் கவனத்தைச் செலுத்துவாரானால் — "வடக்கு வாழ்கிறது, தெற்கும் வளர்கிறது" என்று கூறித் தம் கிளர்ச்சியை மாற்றிக் கொள்வர். தென்னாட்டவர் மட்டுமல்ல எந் நாட்டவரும் மகிழ்வர். உள் நாட்டுப் பூசல் மாறும்.



## 2. வெளி நாட்டவருக்குப் பரத கண்டத்தின் முழு உருவத்தினையும் பார்த்து மகிழும் வாய்ப்பு ஏற்படும்:-

பரத கண்டத்தினைப் பார்க்கவரும் வெளி நாட்டு அறிஞர்கள், டில்லி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களைப் பார்த்ததும் பரத கண்டத்தினைப் பார்த்துவிட்டதாகத் திரும்பிவிடுகின்றனர். மிஞ்சினால் சென்னை வரையில் வந்ததும் சென்றுவிடுகின்றனர். கன்னியாகுமரியில் திருவள்ளுவர் ஆலயம் கட்டப்பட்டு சிறப்புடன் திகழுமானால், அதைப்


பார்க்காமல் திரும்ப மனம் வராது. அதனால் பாரத கண்டத்தின் முழு உருவினையும் பார்த்தவர்கள் ஆவார்கள்.

* * * *

"வடக்கில் இமயமலை பாப்பா — தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய் — இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!"

* * * *

இது தான் பாரதியாரின் பாரதகண்டப் படப்பிடிப்பு என்பதை நாம் மறக்கலாகாது.



என் சிந்தனையில் தோன்றிய விதமாகத் திருவள்ளுவருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவது பெருமக்கள் அனைவரும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியமாதலால், அக் கருத்தைப் பத்திரிகை வாயிலாய்த் தெரிவிப்பது கடமை

யென உணர்ந்து, ஆங்கிலத்தில் எழுதி "டைப்" செய்து Hindu. Madras Mail, Indian Express, Times of Ceylon — ஆகிய பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். Indian Express பத்திரிகையில் வெளியானது மட்டும் என் பார்வைக்குக் கிட்டிற்று.

யான் அனுப்பினதின் சரியான நகலும் (True Copy) இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியான சுருக்கத்தின் நகலும் (True Copy) இதனடியில் வருகின்றன.

## LETTER TO EDITOR.

### MEMORIAL TO TIRUVALLUVAR.

From

P. Ramasamy,
C/o A.D. Murton Esqr.,
Punalur Paper Mills Ltd.,

To

The Editor.

Dear Sir,

'Thirukural' is known as the 'Tamil Bible' and it has the reputation of having been rendered in eighty-three foreign languages. This great masterpice adorns the unique position of having been placed next to 'The Bible' in one of the biggest libraries in the United Kingdom. All the Tamils belonging to various parties and 'isms' take pride in quoting from the 'kural'. But it is a most deplorable thing that so far no effort has been

made to erect a suitable monument or memorial. Even our Indian Government has not so far thought to instal a portray in the hall of the Lok Sabha. Not even a postal stamp has been issued in commemoration of this great bard.

The most appropriate place for installing a suitable monument is Cape Comorin. In and around that many institutions catering to the educational and scientific needs of the people can be started so that it may attract the intellectual men of the world. The memorial should be above caste, creed or religion, but purely a place of dedication to that great poet.

This may be a lone cry in the wilderness but it is of great significance. This is a golden opportunity for all diverse sectarian and political leaders professing multifarious dogmas, to gather together and channel their efforts in such a noble endeavour. A Trust can be formed in the poet's name and an endowment for awarding prizes be created. It is hoped that encouragement will be forthcoming for this noble cause though this may appear a novel scheme.

Punalur, 20—5—1959.

Yours faithfully,

P. RAMASWAMY.

## INDIAN EXPRESS.

## VALLUVAR MEMORIAL.

THIRUKKURAL is known as the **Tamil Bible** and it has been rendered in eighty-three languages.


Tamil belonging to all parties take pride in quoting from the Kural. But it is all deplorable that so far no effort has been made to erect a suitable monument or memorial; not even a postal stamp has been issued in commemoration of the great author of the Kural.

The most appropriate place for installing a suitable monument to Thiruvalluvar is Cape Comorin. In and around that place many institutions catering to the educational need of the people can be started. A trust can be formed and an endowment for awarding prizes created.

29—5—60, Madurai. P Ramaswamy, Punalur.

## என் நன்றி.

"திருவள்ளுவர் அறிவு ஆலயம்" என்னும் பேரால், என் மனதில் தோன்றிய கருத்துக்களை எழுதிக் குவித்திருந்தேன். என் அறிவுத் தந்தையார் பல்கலைப் புலவர் சா. வேதமுத்து அவர்களிடம் காட்டி, அச்சிட்டு வழங்க வேண்டும் என்னும் என் நோக்கத்தையும் தெரிவித்தேன்.



திருவனந்தபுரம் "சித்திரா" என்னும் சிங்கார சிந்தனை அகம்.

படித்துப் பார்த்து, கருத்துக்களை நோக்கி மகிழ்ந்தார்கள். ஆனால், கையாளப்பட்டிருக்கும் சொற்கள், வாக்கிய அமைப்புகள் இவைகளில் குறையிருப்பதாகக் கூறினார்கள். தத்தம் மக்கள் மழலைச் சொற்களில் மறைந்து கிடக்கும் பொருள் வளங்களை உணர்ந்து மகிழும் நிலை பெற்றோர்களுக்கு இயல்பாகவே உண்டு. அவர்களே அம் மழலைச் சொற்களுக்கு

விரிவுரை வழங்கும் பொறுப்பை எடுத்துக் கொள்வர். அது போல என் கருத்துக்கள் சிதையா வண்ணம் என் எழுத்துக் களைச் செப்பம் செய்யும் ஆற்றல் அவர்களுக்கே உண்டு என்று தீர்மானித்து அவர்களிடமே ஒப்புவித்தேன். அவர்களே இந் நூலை இவ்வடிவில் ஆக்கினார்கள். அவர்களுக்கு எனது நன்றியை முதற்கண் கூறிக்கொள்கின்றேன்.

அறிவாலயச் சிந்தனை என் உள்ளத்தில் உருவானதற்கு கொஞ்சக் காலத்திற்குப் பின் முதல் — அது நூல் வடிவாகக் காட்சியளிக்கும் இது வரை எனக்கு எல்லாவித உதவிகளை யும் மனமகிழ்வுடன் நல்கி என்னை ஊக்குவித்த பிரித்தானிய நாட்டுப் (U. K.) பெருமகனார் உயர்திரு. A. D. Murton அவர்களுக்கு யான் என்றும் மறவா நன்றி கூறும் கடப் பாடுடையேன்.

இந் நூலை இத்தனை அழகுடனும் சிறப்புடனும், குறிப் பிட்ட காலத்திற்கு முன்பே அச்சிட்டுக் கொடுத்த மதுரை கோல்டன் அச்சக உரிமையாளர் வீ. ரஞ்சிதநேரு அவர் களுக்கும், பணியாளர்கட்கும் எனது நன்றி உரித்தாகிறது.

இந் நூல் அச்சுருவில் வெளிவருவதற்குப் பக்கபலமா யிருந்து தக்க உதவி செய்துவந்த திருவாளர்கள்: V. மாணிக் கம் V. வீராச்சாமி ஆகிய அன்பர்களுக்கும் என் நன்றி.

இந் நூல் இவ்வுருவாவதற்குக் கையெழுத்துப் பிரதிகள் தயார் செய்தும், நகல்கள் செய்தும் இராப்பகலாக உழைத்த சகோதரர் P. சாமுவேல் ஜோசுவா அவர்களுக்கும் எனது நன்றி.

திருக்குறளையும் திருவள்ளுவரையும் பற்றிய பேரறி ஞர்கள் கருத்துக்களில் சிலவற்றை இதன் கண் வெளியிட வாய்ப்பளித்த "திருவள்ளுவர் நினைவு மலர்" என்னும் நூலை 1935ல் வெளியிட்ட திருவள்ளுவர் திருநாட் கழகத்தினருக் கும் என் நன்றி உரியதாகும்.

வள்ளுவரையும் குறளையும் பற்றி ... ... ... ... ... ... ... ... மேனாட்டறிஞர்கள்

* * *

(குறளிற்) ''சொல்லப்பட்டவைகளில் ஒரு சில பழைய ஏற்பாட்டிற் கூறப்பட்டவைகளில் மிகவும் பழைமையானவற் றோடு ஒத்த காலத்தனவாகும்.........குறள் மிகச் சிறந்த நீதிகளைக் குறித்தெழுந்ததொரு செய்யுணூலாகும்......... (குறள்) ஆசிரியர் தம்முடைய நூலைக் கடவுள் வாழ்த்துக் கூறித் தொடங்கியுள்ளார்; ''அஞ்ஞானியாகிய அவர் கடவுள் வாழ்த்துக் கூறியுள்ள திறத்தை நாம் வியந்து போற்றுமலிருக்க முடியாது; நூல் முழுவதிலும் இந்துக்களுக்கு உரிய மூட நம்பிக்கைகள் பலவற்றிலிருந்து தாம் விடுபட்டு நிற்பதை அவர் நன்கு விளக்கியுள்ளார்.''

— ரெவரெண்டு எலிஜா ஹூல்

கருத்திலும் நடையிலும் ஒப்புயர்வற்று விளங்கும் நூல்களில் தலையாயதான திருக்குறள், அந்நாட்டிற்குரிய நூல்களில் ஒரு பகுதியா யிருப்பதாலும், மிகவும் உண்மையான தனிச் சிறப்பு வாய்ந்திருப்பதாலும் நமது கருத்தை ஈர்க்க வல்லதாயிருக்கிறது. சிற்சில வகுப்பினர்க்கு மட்டும் உரியவாய உண்மைகளைப் பொருட்படுத்தாது ஒதுக்கி; மக்கள் யாவருக்கும் ஒருங்கே அமைவனவாய உண்மைகளை மட்டுமே தம் நூலில் ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார்; இதனால் மநு நூலிலும் ஏனைய சாத்திரங்களிலும் காணப்படும் பல சுவையற்ற பழக்க வழக்கங்கள் இடம் பெறுமல் நீக்கப்பட்டு நூல் நடை பொதுவில் ஒரு மேன்பாட்டையடைந்து பொலிகிறது.

— ரெவரெண்டு டப்ளியூ. எச். ட்ரூ

கடவுளுண்மையை நிலைநாட்டுவதற்கும், பார்ப்பனர்கள் பின்பற்றி வந்த சடங்கு மலிந்த பல - தெய்வ வணக்கத்தைக் கண்டிப்பதற்கும் திருவள்ளுவரையும் சிவவாக்கியரையும் ஒத்த பெரியார்தம் சொல்வன்மையையும் எழுதுமாற்றலையும் பயன்படுத்தி வந்தனர். ''இலியட்'' ''ஈனிட்'' ''டிவைன் காமெடி'' ''பாரடைஸ் லாஸ்ட்'' ''நிபெலங்கன் லீட்'' முதலிய பல நாட்டுக் காவியங்களைக் கற்றுணர்ந்தோர், நீதிகள் மலிந்த ஒரு தொகை நூலை மூன்று கோடி மக்கள் தங்களுடைய வேதமாக எடுத்துக் கூறிப் பெருமை பாராட்டிக் கொள்வதை நம்பாமலிருக்க முடியாது. கிரேக்கர்களிடம் ஹோமர் திகழ்ந்தது போலத் தமிழர்களிடம் திருவள்ளுவர் திகழ்ந்தார் என்பது மறுக்க முடியாததோர் உண்மையாகும். திருக்குறள் ஒரு கல்விக் களஞ்சியம். பாவலர்க்குறுதுணை. ஒப்புயர்வற்ற சொற்றிறம் நிறைந்த ஒழுக்க நூல். திராவிடர் (தமிழர்)களின் மனப்போக்கு உயரொழுக்கத்தையே நாடி நின்றது என்பது(அதனல்)தெற்றென விளங்கும். தமிழ்ப்பெரு மக்களிடை இத்தகைய நல்லொழுக்க மனப்பான்மை குடிகொண்டிருந்ததனுலேதான் புத்தமதம் இந்நாட்டில் கால் கொள்ளவும், கால்கொண்டு திகழவும் நேர்ந்தது என்று

ஊகித்தல் தவருகுமோ? திருவள்ளுவர், சிவவாக்கியர், கபிலர், ஔவை, இன்னும் இவர் போன்ற ஏனைய பண்டைத் திராவிட (தமிழ்)ப் புலவர்களின் நூற்பாங்கை விளக்க வந்த பார்ப்பனர்கள், அவர்களெல்லாம் சமணர்கள் என்று வற் புறுத்திக் கூறுவாராயினர்.

இதற்கு எத்தகைய சான்றும் கிடையாது; ஆனாலும், புத்த மதமும் சமண மதமும் பண்டைத் தமிழ்ப்புலவர்களின் உளப்போக்கையே உட்கொண்டிருந்தன வென்பதை எளிதில் ஐயுற முடியாது. நெருப்பினாலும், போரினாலும், இரக்கமற்ற கொடுமையினாலும் பார்ப்பனர்கள் இந்தியாவில் புத்தமதம் பரவாதபடி அழித்தனர். இருந்தாலும், அம்மதத்தின் அடிப் படையான கொள்கைகளை அவர்களால் அழிக்க முடிய வில்லை. சமயச் சழக்கைக் குறித்தவற்றை ஓர்ந்து, ஆய்ந்து ஒதுக்கியமையினாலேயே திருவள்ளுவர் தம் நூலை எல்லா வற்றையும் அழித்து வந்த மிண்டிய இருட் சமயவாதப் பெருஞ் சுழியிலகப்படுத்தாது காப்பாற்றினர். அந்நூலை அழிப்பதற்கு ஏற்ற எக்காரணத்தையும் பார்ப்பனர்கள் கண்டிலர்.

மனைவியர் தம் கணவன்மார்களை நேசிக்க வேண்டும் என்றும், மக்கள் வாய்மையும், ஈகையும், அமைதியுடைமை யும் உடையவர்களாயிருக்க வேண்டும் என்றும், அரசர்கள் தெள்ளறிவும் செந்தண்மையும் உடையவர்களாயும், குடிகள் நாணயமும், கீழ்ப்படிதலும், பிறர்க்கு உதவும் பெற்றியும் உடையவர்களாயிருக்க வேண்டும் என்றும் பணிக்கும் ஒரு புலவனை எந்தக் குருவும் குற்றங் கூற முடியாதன்றோ?

யூதர்களுக்குப் பத்துக்கற்பனைகள் எவ்வாறு தவறுனக் கட்டளைகளாக இருந்தனவோ, அவ்வாறே அதன் (குறளின்) கூற்றுக்கள் கட்டளைகளாகக் கருதப்பட்டு வருகின்றன. குறள்மணிகள் செந்தமிழின் தூய உயர்நடைக்கு எடுத்துக் காட்டாக இலங்குகின்றன. இத்தாலி மொழிக்கும், கருத்து

மேன்பாட்டுக்கும் 'தாந்தே'யின் மாபெரு நூல் எவ்வளவு இன்றியமையாததும் பெருமையளிப்பதுமாகுமோ, அவ்வள விற்குத் தமிழ்மொழிக்கு அது (குறள்) இன்றியமையாததும் பெருமையளிப்பதுமாகும் என்று கூறுவது மிகையாகாது.

**— சார்லஸ் ஈ. கவர்**

வள்ளுவர் குருமாரைக் கண்டித்து ஒன்றுமே கூறவில்லை என்று திரு. கவர் கூறியதில் உண்மையிருக்கலாம். அவர் குருமாருக்கு எதிரிடையாக ஒன்றுங் கூறவில்லைதான்; ஆனல், அத்தகைய ஒரு நூலில் ஒன்றுமே கூருதிருந்தது குறிப்பிடத் தக்கதன்றே? பார்ப்பனர்கள் எல்லோமே குருமார் கள் அல்லர்; குருமார்களை ஆதரிப்பவர்களும், வேலைக்கு அமர்த்திக் கொள்வோருமே ஆவர். பார்ப்பனர்களுக்கு அந்தணர் என்பது ஒரு சிறப்புப்பெயர் அவர்கள் அப்பெயரால் அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவரல்லர் என்று ஆசிரி யர் குத்தலாக மொழிகிருர். அழகும், தண்மையும் ஐந்தவித்த பற்றற்ற பெரியார்க்கே உரிய பண்புகளாகும்.

> ''அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லான்.''

சமயப்போலி, வஞ்சமனத்தான் படிற்ருெழுக்கம், சமயக் கொடுமை ஆகியவை நூல் முழுவதிலுங் கண்டிக்கப்பட்டுள் ளன. பார்ப்பனர்களுடைய தெய்வங்களை வஞ்சப் புகழ்ச்சி யாகச் சுட்டிக் கூறியுள்ளார் என்றே சொல்லலாம்.

**— ரெவரெண்டு ஈ. ஜே. ராபின்சன்**

பறையரென்று கருதப்பட்டவராயினும் திருவள்ளுவர் தெய்வத்தன்மை வாய்ந்த புலவர் பெருமாஞகவே மதிக்கப் பட்டுவந்தார்.

தமிழ் நூல்களில் மிகவும் சிறந்த நூல்களாக எல்லோ ராலும் கருதப்பட்டு வருகிற குறளும், சிந்தாமணியும் வட

மொழித் தொடர்பு சிறிதுமில்லாமல் அமைப்பிலும், யாப்பிலும் தனிச் சிறப்பு வாய்ந்துள்ளன.

**— ரைட் ரெவரெண்டு ராபர்ட் கால்ட்வெல்**
டி. டி., எல். எல். டி.

தமிழ் நூல்களில் தலே சிறந்து விளங்குவது திருக்குறளே. உயர்வுடனும் தூய்மையுடனும் உள்ளக்கருத்துக்களே எடுத்து விளக்கிய நூல்களில் அதுவும் ஒன்ருகும்.

திருக்குறளாசிரியர் வகுப்புக்களேயும், மக்கட்பிரிவுகளேயும், நம்பிக்கைகளேயும் பொருட்படுத்தாமல் மக்கட்குழுவிற்கே உரியவகையில் எழுதிச் செல்கிருர்; ஆன்ற நல்லொழுக்கத்தையும், கலப்பற்ற நீதியையுமே வகுத்துச் செல்கிருர்; வாய்மையும் அறமும் அறங்களிற் றலே சிறந்தன என்று பறை சாற்றுகிருர்; இல்லற வாழ்க்கைக்கும் குடியியல் வாழ்க்கைக்குமுரிய உயர்ந்த ஒழுக்க முறைகளே ஒன்று படுத்தி விதித்துச் செல்கிருர்; உயர்ந்த கருத்துக்களே எண்ணுவதிலும், அவற்றைச் சீரிய முறையில் எழுதுவதிலும், வியக்கத்தக்க வகையில் எழுதியவற்றைச் செய்யுண்முறையில் அமைப்பதிலும், தெய்வத்தன்மை வாய்ந்த இயற்கை அன்னேயின் இயம்பொணு எழில் நலங்களேத் தூய மனத்துடன் உன்னி உன்னி உளங்கொள்வதிலும், அகத்தெழும் இன்ப நிகழ்ச்சி நுணுக்கங்களே மிக எளிதான முறையில் ஆய்ந்தோதிச் செல்வதிலும் எத்தகைய குறைவுமில்லா நிறைவாற்றல் படைத்தவராய் இலகுகிருர்.

**— எம். ஏரியல்**

இந்நூல் (திருக்குறள்) பயக்கும் இன்பம் எத்தகையது என்று எம்மொழிபெயர்ப்பும் எடுத்துக்காட்ட முடியாது. உண்மையைக் கூறுமிட்த்து, வெள்ளிச் சரிகைப் பையிலிட்ட பொன் இலந்தை (ஆப்பிள்) க்கனியாகும் அது.

**— டாக்டர் கிரெளல்**

''உலகம் பயந்த பேரறிஞர்களிற் றிருமயிலை செசவாளரும் ஒருவர். முற்ற முடிந்ததாய் அவர் எழுதிய ஒரே தனி நூலாகிய அது காலச் சுழலிடைப்பட்டும் கறை ஏதும் எய்தாமலும், கருத்தை ஈர்க்க வல்லதான எத்தகைய பாட பேதமும் இல்லாமலும் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்துள்ளது.''

நூற்சிறப்பில் அது (குறள்) மற்ற எல்லாத் தமிழ்நூல்களையுந் தாழ்த்தித் தான் உயர்ந்து நிற்கிறது. ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தினுள்ளே, உயிரினிலே இடங் கொண்டுள்ளனவும், என்றென்றும் மாயாது திகழ்வனவுமாகிய ஒரு சில பெரு நூல்களில் அதுவும் ஒன்று.

அடக்கமுடைமையும், ஈகையுடைமையும், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சான்றாண்மையான பொறையுடைமையும் 'அரிஸ்டாடி'லால் கூறப்படவில்லை என்று சர். ஏ. கிரான்ட் என்பவர் கூறுகிறார். இம்மூன்றும் நூல் எங்கணும் பசுமரத்தாணிபோல இத்தமிழ் நீதிநூலாரால் அறையப்படுகின்றன.

குறளுக்கு எய்திய பெருமைக்குத் தலைமையான காரணமாயிருப்பது அதன் சொலற்கரிய அழகு வாய்ந்த செய்யுள் நடையே யாகும். குறட் பாவி லமைந்ததனால் உண்டாகிய சொற் சுருக்கம் செந்நாப்போதாரின் உரைகளுக்குத் தெய்வத் தன்மையை அளிக்கின்றன. அவை பொறுக்கி எடுத்த நீதியுரைகள். கிரீசில் பாடப்பட்ட பாட்டுக்களுக்கும் இதற்கும் பொருளிலும் கருத்திலும், பாடப்பட்ட காலத்திருந்த குடியியலிலும் ஒற்றுமை காணப்படுவது வியப்பை அளிப்பதாகும். கிரேக்கக் குறுஞ் செய்யுளுரைகளிலும், 'மார்ஷல்' உரைகளிலும், இலத்தீன் மொழியிலுள்ள இயற்கைச் செய்யுட்களிலும் குறளிற்றிகழும் பண்பு நலங்களிற் சிற்சில காணப்படுகின்றன.

தமிழ் யாப்பில் அமைந்துள்ள தொடை நயங்களின் அழகுகள் 'புரொப்பர்ஷியஸ்' என்பாரின் செய்யுணலங்களை நினைவூட்டுகின்றன.

— ரெவரெண்டு ஜி. யூ. போப்.

மிகவுந் தூய்மையானவும், உயர்வையளிக்க வல்லனவும், சமயச் சார்பானவையுமான மனவெழுச்சிகளுக்கு விளைநில மாயுள்ள தமிழ் மொழியில் தொகுக்கப்பட்டுள்ள செய்யுள் நூல்களில் குறள் மிகவும் புகழத் தக்க தொரு தொகை நூலாகும்.

பகவத் கீதையில் சொல்லப்பட்ட நீதித் தததுவத்திற்கு ஒத்தனவாகவே குறளாசிரியர் ஓதும் தத்துவங்களும் காணப் படுகின்றன.

— டாக்டர். பார்த்

இந்திய மக்களின் மனத்திற் குடி கொண்டுள்ள இரண்டு நூல்கள் இந்தியாவிலுள. அவை வட இந்தியப் பகுதியிலுள்ள குரிசில் முதல் குடிமகனீருகவுள்ள ஒவ்வொரு வரும் அறிந்த துளசிதாசரின் இராமாயணமும், அதைப் போன்றே தென்னிந்தியப் பகுதி முழுவதிலும் உள்ளோர் நன்கறிந்த திருவள்ளுவர் திருக்குறளுமாம்.

இவ்விரண்டு நூல்களும் கலப்பற்ற தூய்மை வாய்ந்தன என்பது இரு நூலாசிரியர்கட்கும் பெருமை அளிப்பதாகும். இவையிரண்டில் குறளே காலத்தால் மிகவும் முந்தியதாம் ...

... ... ... தமிழிலக்கியத்தின் தலையணியாகிய இதை (திருக்குறளை) ஓதியுணர்ந்தாலல்லது தமிழறிந்தவன் என்று எவனும் கூறிக் கொள்ள முடியாது என்பதில் சிறிதும் ஐயமின்று.

— பிரடெரிக் பின்காட்

உயர்ந்த கருத்துக்களும், தூய்மையான ஒழுக்க விதிகளும், தூய்மையாக நினைப்பதும் எழுதுவதும் இயற்கையில் காணக்கூடியனவே என்றும் உண்மையினைத் தெரிவிக்க வல்லதா யிருப்பதால் (குறள்) ஆர்வத்துடன் ஓதப்படும். இந்நூலாசிரியர் தாங் கூற வந்த நீதியுரைகளை அழுத்தந் திருத்தமாகச் செய்யுணடையிற் கூறுவதை யொப்ப உள்ள மற்றொரு நூலை மக்களாய்ப் பிறந்தோர் பேசும் வேறெம் மொழியிலும் காணல் முடியாது.

ரெவரெண்டு பர்சிவல்

(உலகில் உள்ள மக்கள் பேசும் மொழிகள் சுமார்: 999
— ஆசிரியர்.)

வாழ்க்கையின் முப் பேரிலக்குகளான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையுங் குறித்து ஆக்கப்பட்ட ஆயிரத்து முன்னூற்று முப்பது குறுஞ் செய்யுட் டொடர்களைக் கொண்ட திருவள்ளுவரின் திருக்குறள் உலக இலக்கியங் களிலேயே பொறுக்கி யெடுத்த மணிகளில் ஒன்றாகும்.

புத்தர்களும், சமணர்களும், வைணவர்களும், சைவர்களும் பறையர் வகுப்பைச் சேர்ந்த புலவரான அம்முனிவரைத் தத்தம் மதத்தைச் சேர்ந்தவர் என்று உரிமை கொண்டாடுகின்றனர். அவர் (வள்ளுவர்) அவற்றில் எம் மதத்தையும் சேர்ந்தவரல்லர். ஆனால், எல்லாவற்றிற்கும் அவர் ஒருங்கே உரியவர் என்றே கூறலாம். சாதி, வகுப்பு, மதம் என்ற எல்லாப் பிரிவினைகளையும் அவர் கடந்துநிற்கிறார். அவர் கூற்றுக்களோ, மக்கட் குழுவிற்கே பொதுவாய் உரியவான நீதியும் அறிவுரையுமே ஆகும். எனவே, பல நூற்றாண்டுகளாகத் திருக்குறள், தான் பிறந்த நாட்டிலே பரந்துபடக் கற்கப்பட்டுக் கருந்தனமாக மதிக்கப்பட்டு வருவதுடன் பல மேல்நாட்டு அறிஞர்களாலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டு வந்துளதென்பதில் வியப்பொன்றும் இல்லை.

ஏறக்குறைய 1730 - ஆம் ஆண்டளவிலேயே அதன் முதலிரு பால்களும் சி. ஜோஸப் பெஸ்கி பாதிரியாரால் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலமாகியவற்றில் மொழிபெயர்ப்புக்கள் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்ருய் வெளிவந்தன. 1803 - ஆம் ஆண்டில் 'காமொர்' என்பவரால் ஜெர்மன் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. ஆயினும், 1856 - ல் வெளிவந்த 'கார்ல் கிரௌல்' என்பாரின் ஜெர்மன் மொழி பெயர்ப்பே சிறந்ததாகும். ஜெர்மன் புலவரும் தேர்ந்த மொழிபெயர்ப்பாசிரியருமான 'பிரெடரிக் ரூக்கர்ட்' என்பவ ரால் சில குறள்கள் 1847 - ல் மொழிபெயர்க்கப்பட்டன. யானறிந்த வரையில் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ஜி. யூ. போப் அவர்களின் மொழிபெயர்ப்பே மிகவுஞ் சிறந்ததாகும்.

திரு. போப் அவர்கள் தமிழ்வல்லவர் என்பதுமட்டு மன்று; பல ஆண்டுகள் தமிழ் மக்களிடையே வாழ்ந்து வந்தவராதலால், அவர்கள்மாட்டு உண்மையன்புடையவர். திருவள்ளுவ முனிவரை மைலாப்பூரைச் சேர்ந்த யாரோ ஒருவர் என்று கூறுதல் தகாது; அவர் புகழ் அவர் பிறந்த நாட்டைக் கடந்து தொலைவிலுள்ள வெளிநாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பே பரவிவிட்டது.

-- **பேராசிரியர் வின்டர்னிட்ஸ்**

''ஒரு நோக்கு நோய் நோக்கு, ஒன்றந் நோய்க்கு மருந்து'' — என்று தலைமகளுளப்பாட்டினைக் குறித்து இப் பாலில் (காமத்துப்பாலில்) வரும் ஒரு குறளே டாக்டர் கிரௌல் என்பவரைத் தமிழ்ச் செய்யுட்களை நன்கு மதிக்கச் செய்து குறளை ஓதியுணரத் தூண்டியதாகும்.

குறள் தூய செந்தமிழானியன்ற தொரு நூல். ஆசிரியர் அந்நூலில் எடுத்தாண்டுள்ள பன்னீராயிரஞ் சொற்களில் ஐம்பதுகூட வட சொற்கள் தேறவில்லை. ஆங்கிலத்தில் 'பனியன்' என்பார் எழுதியுள்ள ஆங்கில நடைத் தூய்மை

யையும் திருவள்ளுவர் விஞ்சுகிறார்.

குறளின் தூய்மையை நோக்க இதுகாறும் வெளி வந்துள்ள மற்றெந்தத் தமிழ் நூலும் அதனருகிலும் சேர்க்கப்படுவதற்கில்லை. தற்காலம் வழங்கி வரும் தமிழை அஃது (குறள்) என்றென்றும் நின்று கண்டித்தொதுக்கும் பான்மையதாகும். தம் தாய்மொழியின் (தமிழின்) வன்மை யையும் இன்னோசையையும் ஆற்றலையும் திருவள்ளுவர் (தம் நூலில்)நன்கு தெரிவித்துள்ளார். குறளைத் திருத்தஞ் செய்ய முயல்வது முடியாததொன்றாகும்; அதன் அமைப்பைச் செம்மைப் படுத்துவதுவதென்பதும் அப்படியே. அஃது ஓர் ஒப்பற்ற இழைப்புச் சித்திரமாகும். அதில் இழைக்கப்பட்டு உள்ள மணிகளில் ஏதாவது ஒன்றின் பருமனையோ, வடிவை யோ, இன்றேல் நிறத்தையோ யா ஒரு சிறிது மாற்றினாலும் அழகனைத்தும் சிதைந்துவிடும்.

இத்தகைய ஒரு பெரியாரையும், ஒப்பரிய நூலையும் பயந்த ஒரு நாடு இகழ்ந்தொதுக்கக் கூடிய இழிதன்மை வாய்ந்த ஒரு நாடாக இருத்தல் முடியாது என்பதை நினைக்க அந்நினைவு ஆறுதலை அளிக்கின்றது. அப்பெரியார் எடுத்து ஓதும் நீதிகள், நல்லொழுக்கமே விளைநிலமாய் அமையக் கூடிய பண்பு வாய்ந்த ஒரு நாட்டிலன்றி விளையா எனவே, தமிழ் மக்களின் விடுதலைக்காகப் பாடுபடு வோர்க்குத் திருக்குறள் தனிப்பட்ட பேருதவி நல்குவ தாகும்.

-- டாக்டர் ஜே. லாசரஸ்

('ஆல்பர்ட் சுவிட்சர்' என்னும் திருப்பெயர் தாங்கிய— நோபல் பரிசு பெற்ற ஆங்கிலப் பேரறிஞர் இந்தியப் பெரு மக்களின் கருத்தை அறிய ஆவல்கொண்டு — இந்தியாவின் சரித்திர நூல்கள் சமஸ்கிருத மொழியிலும், அவற்றின் மொழிபெயர்ப்புகளிலும், தமிழ் மொழியில் உள்ள சமய நூல்

கள், இதிகாச நூல்கள் அனைத்தையும் மிகக் கவனத்துடன் கற்று, ஆராய்ந்து, அவைகளிலிருந்து தெளிந்த உண்மைகளை — ''இந்தியாவின் நினைப்பும்; அதன் வளர்ச்சியும்'' (**''The Indian Thought and its Development''**) என்னும் நூலில் ஆங்கில மொழியில் 1935 — ல் வெளியிட்டிருக்கிறார்.

அவர் அவைகளை வெளியிடும் முறை ஒவ்வொரு நூலாகப் பாகு படுத்திக்கொண்டு, அதில் கண்ட கருத்துக்களை ஆதாரங்களுடன் விளக்கிச் செல்லும் சீரிய நெறியாகும்.

அவ்வாறு முறைப்படுத்திச் செல்லுகையில் திருக்குறளைப்பற்றி விளக்குமிடத்து, ஒவ்வொரு கருத்தையும் பல குறள்களை ஒப்புநோக்கி, ஆதாரங் காட்டி மிக விரிவாக எழுதியிருக்கிறார்.

அவர் குறட் கருத்தைச் சிறப்பித்துக்கூறும் பகுதிகளை எல்லாம் அதிலுள்ளவாறே எடுத்துக் கூறுவதானால், அதுவே ஒரு புத்தகமாகிவிடும். அவற்றின் திரண்ட பொருளைமட்டும் இங்கு எடுத்துக் கூறுதல் சாலும்.

— ஆசிரியர்.)

* * *

திருவள்ளுவர் உலகத்தில் தோன்றிய மேதைகளில் மேதையாவார். மக்கள் வாழ்க்கையில் தொடர்புள்ள பல துறைக் கலைகளையும் உணர்ந்திருக்கிறார். மொழியறிவிலும் திறமையுடையவர் என்பது அவர் கையாண்டிருக்கும் சொற்கள், சொற்குறியீடுகள் முதலியவற்றால் நன்கு புலனாகின்றது.

வள்ளுவர், அவர் தோன்றிய நாட்டில் வேரூன்றியிருக்கும் குலப்பாகுபாடுகளில் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த

வர். அவர் செய்திருக்கும் 'திருக்குறள்' என்ற நூலோ ஒப்பற்ற மாபெரும் நூல்.

இந்தியாவில் ஆரியர்களால் எழுதப்பட்டு வழங்கி வரும் நூல்களுக்கும் திருக்குறளுக்கும் நேர்மாருன வேற்றுமை உண்டு. எனவே, திருக்குறள்முன் அவைகள் நிற்கவும் தகுதியில்லாதவை என்பது மிகையாகாது. நீதிக்கும் நேர்மைக்கும், மனிதப் பண்புக்கும் உறைவிடமாகும் மக்கள் இதனை நன்கறிவர்.

தமிழ் மக்களின் காதல் மண முறையினுக்கு இலக்கணம் கூறும் நூல் தொல்காப்பியமாகும். அதில் அகப்பொருள் இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. திருக்குறளில் அவ்விலக்கணத்துக்கு இலக்கியமாகக் ''காமத்துப்பால்'' என்னும் பகுதி அமைந்திருக்கிறது. வள்ளுவர் அதைக் 'களவு' 'கற்பு' என்னும் பிரிவுகளில் நாடக முறையில் அமைத்திருக்கிருர்.

எபிரேய மக்களில் — பல கலைகளிலும் தேர்ந்த ஓர் பேரறிஞர் கி. மு. பத்தாம் நூற்ருண்டில் 'சாலொமோன்' என்னும் பெயருடன் அரசு செலுத்தி வந்தார். தமிழ் மக்களின் அகப்பொருள் இலக்கணத்தை நன்கு கற்று, எபிரேய மக்களின் காதல் மணமுறையினை விளக்க, ''உன்னதப் பாட்டு'' என்னும் பெயரில் ஒரு காவியம் புனைந்து இருக்கிருர். எபிரேய மொழியில் அந்நூலுக்குப் ''பாட்டுக்களின் பாட்டு'' என்று பொருள்படும் பெயர் இடப்பட்டிருக்கிறது. அது 'பைபிள்' நூலில் இடம் பெற்றிருக்கிறது. அதேபோலத் தமிழர் மறையாம் திருக்குறளில் ''காமத்துப்பால்'' என்னும் பகுதி அமைந்துள்ளது. எனவே அது அதன் உயர்வைக் குறைப்பதாகாது.

இந்தியாவிலுள்ள சமய நூல்கள், நீதிநூல்கள் முதலான

பலவற்றையும் பல காலமாக மிகக் கருத்துடன் படித்து வந்துள்ளேன். அவ்வாறே அவ்வம்மதத் தலைவர்களின் போதனைகளையும் சாதனைகளையும் கற்றிருக்கிறேன்.

உலக மக்கள் யாவருக்கும் பொருந்தக் கூடியதும் வாழ்க்கையில் கடைபிடிக்கக் கூடியதுமான நீதிகளை ஒருங்கே தெரிவிக்கும் நூல் திருக்குறள் ஒன்றே என்னும் முடிவுக்கு வரலானேன்; பேராச்சரியங் கொண்டேன்.

இத்தகைய ஒப்பற்ற நூல் தோன்றிய நாட்டில் — மா பெரும் மேதை தோன்றிய பரதகண்டத்தில் — நான் முன் எடுத்துக் காட்டிய மூடப் பழக்க வழக்கங்கள் இன்றும் நிலைத்தும், கிளைத்தும், செழித்தும் இருக்கிறதே என்பதை நினைக்கும்போது அதைப் பார்க்கிலும் ஆச்சரியங் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளேன். மூடப் பழக்க வழக்கங்களின் ஆணிவேரின் ஆற்றல் அத்தகையதுபோலும் என உணர்ந்து மௌனம் சாதிக்க வேண்டியவனானேன்.

## வள்ளுவரையும் குறளையும் பற்றி
## உள்நாட்டுப் பிரமுகர்கள்

திருவள்ளுவர் புகழ்பற்றி இன்று உலகமெங்கும் பேசப் படுகிறது. குறளைப் படித்துத் தமிழ்நாட்டு மக்களும் பயன் பெறுகின்றனர். குறள் ஒரு நீதி நூல். வாழ்வில் மனிதன் தள்ளத்தக்கவை எவை என்பதையும், கொள்ளத்தக்கவை எவை என்பதையும் பிரித்து விளக்குகிறது. பலர் அதைப் படித்து அதன்படி நடக்க முயற்சிக்கின்றனர்.

வள்ளுவர் வாழ்ந்த காலம் முதலியவைபற்றி ஆராய்ச்சி யும் நடக்கிறது. ஆராய்ச்சி என்பது முடிவான ஒன்றல்ல. ஆராய்ச்சியின் பயனாய்க் கிடைக்கும் தகவலை வைத்துக் கொண்டு மேலும் ஆராயவேண்டும். வள்ளுவர் உலகிற்கே

சொந்தமானவர். தமிழ் நாட்டுக்கு மட்டும் சொந்தமானவர் என்க் கொள்ளக்கூடாது. அதனுலேயே பாரதியும்—

"வள்ளுவன் தன்னை உலகினுக் கீந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு..."

என்று கூறியுள்ளார். வள்ளுவர், அவர் வாழ்ந்த காலத் திற்கோ அல்லது தற்காலத்திற்கு மட்டுமோ பொருந்தும் படியான நூலை அளிக்கவில்லை. உலகம் உள்ளவரை மனிதன் நீதி வழுவாமல், ஒழுக்கம் குறையாமல் நடப்பதற்கான வழியைக் கூறியுள்ளார்.

வாழ்க்கையில் அதன்படி நடக்க முடியாவிட்டாலும் நடப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மனிதர் ஒவ்வொரு வரிடமும் நல்ல எண்ணங்களும் தீய எண்ணங்களும் உண்டு. நல்ல எண்ணங்களை வளர்க்கும்படியான நூல்களைப் படித்து அதன்படி நடக்க முயன்ருல் முடிவில் தீய எண்ணங்கள் ஒழியும்.

வள்ளுவர் குறளைச் சாதாரணமான மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் உரை எழுதவேண்டும். உரைகள் பெரிய அளவில் இருந்தால் எல்லோராலும் படிக்கமுடியாது. படிப்பதற்கு அவர்களுக்கு நேரங் கிடையாது. ஆகவே, அது சிறிய அளவில் உள்ளதாக இருக்கவேண்டும்.

**உயர்திரு. காமராஜ் அவர்கள்**
(தமிழ் மாநிலத்தின் முதலமைச்சர்.)



# Tiru Valluvar was a Tamil Saint.

Tradition says that he was a Hari jan weaver. He is said to have lived in the First Century of the Christian Era. He gave us the famous Tirukkural, holy maxims described by Tamilians as the Tamil Veda and by M. Ariel, as one of the highest and purest expressions of human thought. The maxims number 1330. These have been translated into many languages. There are Several English Translations.

" Death is like unto Sleep and Life is
Like waking after that Sleep."

Compare Words Worth's — Kural

"Death is but a Sleep and a forgetting.

M. K. GANDHI.

"உண்மை சொல்ல அஞ்சமாட்டார் — காந்தி தாத்தா
நானும் அவர் போல் நடப்பேன் நல்ல பாப்பா."

இரா, மாரி, அறிவுச்செல்வம்.

## சிறப்புப் பாயிரம்

(பல்கலைப் புலவர் சா. வேதமுத்து.)

செந்நெல்லும் செங்கரும்பும் செந்தமிழ் எனச் செழித்தோங்கும் திருநெல்வேலித் திருப்பதிவாழ் சிந்தனைச் செல்வர் உயர் திருவாளர் ப. இராமசாமியவர்கள் உருவாக்கிய "திருவள்ளுவர் அறிவு ஆலயம்" என்னும் செம்மைசால் சிறுநூலைக், கையெழுத்திலேயே பார்க்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தமைக்கு யான் பெருமகிழ்வெய்துகிறேன்.

"ஆசிரியர் திருக்குறளை நன்கு கற்று, உணர்ந்து அதன் வழியொழுகும் பண்பினர்; நன்றியறியும் பெருங்குணம் படைத்தவர்" — என்பது இந்நூலை மேலோட்டமாய்ப் பார்ப்பவர்க்கும் இனிது விளங்கும்.

திருவள்ளுவர்மீது அவர் கொண்டிருக்கும் பக்தி அளவு கடந்தது. திருவள்ளுவர்பால் அவ்வளவு பக்தி கொண்டிருந்தும், அப்பக்தியைச் செயலாக்கும் முறையை நோக்குமிடத்து, அது, வீண்பக்தியாகவாவது மூடபக்தியாகவாவது செல்லுமாறில்லை.

திருவள்ளுவர் பெயரால் — அவருக்கு நன்றி தெரிவிக்கும் முறையினில் — ஒரு பெரிய 'ஆலயம்' கட்டவேண்டும் என்று கூறுகிறார். ஆனால், திருவள்ளுவர்போல் ஓர் உருவம் அமைத்து, அதற்குப் 'பூஜை நைவேத்தியங்கள்' - செய்து, அதன் வழியாய்த் திருவள்ளுவருக்கு நன்றி தெரிவிக்கும் முறையினில் அன்று. மக்களுக்கு நல்லறிவும் நற்பண்பும் புகட்டிடும் இடமாய், அகில உலக மாந்தருக்கும் உரியதாய், எல்லோரும் இன்புற்றிருக்கத் திட்டம் வகுத்துச் செயலாற்றும் அனைத்துலகப் பொதுச் செயலகமாய், அது மிளிரவேண்டும் என்றும் — அவ்வழியில் வள்ளுவருக்கு நன்றி தெரிவிக்கவேண்டு மென்றும் விளம்புகிறார்.

உலக மக்கள் யாவரும் இன்புற்றிருக்க வழி செய்யும் இத்திட்டத்தைத் திருவள்ளுவர் பெயரால் — திருவள்ளுவருக்கு நன்றி செலுத்தும் முறையில் — நிறைவேற்ற வேண்டுமென்று இதற்குமுன் யாரும் சொன்னதாக யான் கேள்விப்பட்டதில்லை.

ஆசிரியர் எடுத்துக் கூறும் திட்டத்தை எந்த அரசியல் வாதியும், எந்த மதவாதியும் குறை கூறமாட்டார்கள். ஆனால் நிறைவேறுமா என்று ஐயுறுவர்.

> ''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
> தள்ளினும் தள்ளாமை நீர்த்து.''

— என்று வள்ளுவர் கூறியிருப்பது அவருக்கு ஊக்கம் அளித்திருக்குமாகையால் தள்ளத்தக்கதல்லாத அத்திட்டத்தை மனத்தெளிவுடன் நம்முன் வைக்கிறார்.

''திட்டம் உயர்ந்த திட்டந்தான். ஆனால், அதை வள்ளுவர் பெயரால் ஏன் ஏற்படுத்த வேண்டும்?'' என்னும் கேள்வி எழும்; எழுந்தது; யார் உள்ளத்திலும் அன்று; என்னுடைய உள்ளத்திலேயே. சிறிது நேரத்திற்குப்பின்

விடையும் அங்கிருந்தே வந்தது.

அவ்விடையாவது:-

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு — மக்களுக்குச் சான்றாக எடுத்துக் காட்டுவதற்கு — சமயத் தொடர்பற்ற மக்களில் — பலவகைச் சிறப்பியல்புகளும் பெற்று முழுமனிதனாக விளங்கிய ஒருவர் — வள்ளுவரைத் தவிர — வள்ளுவர் காலத்திற்கு முன்னாவது, அவர் காலத்திற்குப் பின் இதுவரையிலாவது எந்நாட்டினரிலும் எம்மொழியினரிலும் தோன்றினதாகச் சரித்திர வாயிலாக வெளிப்படாமையால் — ஆசிரியர் எடுத்துக் கூறும் மாபெரும் திட்டத்தை வள்ளுவர் பெயரால் — வள்ளுவருக்கு நன்றி செலுத்தும் வகையில் நிறைவேற்றுவதே சாலப் பொருத்தமாகும்" என்பதாம்.

வள்ளுவர் சிறப்பியல்புகளில் சிலவற்றையேனும் எடுத்துக் கூறுவது இவ்விடத்துக்கு ஏற்றதாகையால் அவற்றைக் கூறி, இச்சிறப்புப் பாயிரத்தை முடிப்பது தகுதியென நினைக்கின்றேன். அதற்குத் திருக்குறளும், குறள்பற்றிய ஆன்றோர் வாக்கும் ஆதாரமாகும்.

சிறப்பியல்புகளாவன:-

## 1. நூல் பல உணர்ந்தோர்

(பலவகைப்பட்ட நூல்கள்)

"பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு."

(தி. கு. 533)

(சமய நூல்கள்)

''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.''

(தி. கு. 543

(அற நூல்கள்)

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.''

(தி. கு. 322

(வைத்திய நூல்கள்)

''மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.''

(தி. கு. 941

## 2. மதிநுட்பம் உடையோர்

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.''

(தி. கு. 28

## 3. சமயக் கணக்கர் மதிவழிசெல்லாச் சான்றோர்

''சமயக் கணக்கர் மதிவழி செல்லாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற

பொய்யிற் புலவன் புகலுரை தேராய்.',

(கல்லாடம்)

''ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார் — நன்றென
எப்பா வலரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி.''

(கல்லாடர்)

குறிப்பு:— திருக்குறள் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் எந்தச் சமயக் கடவுட் பெயரும் குறிக்கப்பட வில்லை. காணப்படுகின்றவைகளும், காணப்படாதவைகளுமான எல்லாப் பொருட்களையும் உண்டாக்கின கடவுள் ஒருவர் உளர்; அவரை வழிபடல் அவசியம் என்றே விவரிக்கப் பட்டிருக்கிறது.

## 4. பிறப்பினால் உயர்வு தாழ்வு கூறுதல் பெரும்பிழை என்ற பெரியார்

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்.''

(தி. கு. 972)

''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லர் கீழல் லவர்.''

(தி. கு. 973)

5. ஒரு குலத்துக்கு ஒரு நீதியென்ற முறையில் அல்லாது உலக மாந்தர் அனைவருக்கும் ஒருபடியாக நீதி கூறிய அறநெறி அண்ணல்.

''வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்
[கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொரு நீதி.''

(சுந்தரம்பிள்ளை — மனோன்மணீயம்)

6. நல்லொழுக்கத்தின் விளைவு நன்மையென்பதையும் தீயொழுக்கத்தின் விளைவு தீமை என்பதையும் உணர்த்துவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லா வல்லார்

(பொது)

''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.''

(தி. கு. 138)

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.''

(தி. கு. 202)

(பொய்ச் சொல்)

''தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.''

(தி. .கு 293)

''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரில் தலை.''

(தி. கு. 295)

(புறங்கூறும் புன்சொல்)

''புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.''

(தி. கு. 183)

''அறனோக்கி ஆற்றுங்கொல் வையம் புறனோக்கி
புன்சொல் உரைப்பான் பொறை.''

(தி. கு. 189)

(வன் சொல்)

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது.''

(தி. கு. 99)

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.''

(தி. கு. 100)

(பயனில்லாத சொல்)

''நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லார் அகத்து.,,

(தி. கு. 194)

''பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.''

(தி. கு. 196)

( களவு )

''உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.''

(தி. கு. 282)

''கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.''

(தி. கு. 290)

( பிறர் மனையாளை விரும்புதல் )

''விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்.''

(தி. கு. 143)

''பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.''

(தி. கு. 146)

( வரைவின் மகளிரை விரும்புதல் )

''பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறை
[ யில்
ஏதில் பிணந்தழீஇ யற்று.''

(தி. கு. 913)

''வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.''

(தி. கு. 919)

(கட் குடித்தல்)

''உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.''

(தி. கு. 922)

''துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.''

(தி. கு. 926)

(கோபம்)

''சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.''

(தி. கு. 307)

''இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.''

(தி. கு. 310)

(கொலை)

''நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.''

(தி. கு. 324)

''கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண் [ மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.''

(தி. கு. 326)

(புறத் துறவு)

''நெஞ்சில் துறவார் துறந்தாற்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.''

(தி. கு. 276)

''வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.''

(தி. கு. 271)

மேலும்,

''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.''

(தி. கு. 466)

என்னும் விதிக்கிணங்க, செய்தக்க நல்லொழுக்கம் பற்றிய அதிகாரங்களுக்கு உடன்பாட்டு முறையிலும், செய்தக்க அல்லாத தீயொழுக்கம்பற்றிய அதிகாரங்கட்கு எதிர்மறை முறையிலும் — பெயர்கள் கொடுத்திருப்பதை நோக்கினும், அன்னார் — ஒழுக்க இழுக்கம்பற்றிய கருத்து நன்கு புலனாகும்.

இடச் சுருக்கங் கருதி, மாதிரிக்காகச் சிலவே இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. வையத்துள் வாழ்ந்தாலும், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலைக்கு ஒழுக்கம் வகுக்கப்பட்டிருப்பதை நூலில் காணலாம்.

7. பெரும்பான்மை மக்களால் தவறான முறையில்
பொருள் கொள்ளப்பட்டிருந்த சில
பண்புகளுக்கும், செய்கைகளுக்கும்
மெய்யான அளவை வகுத்த
மெய்ஞ்ஞானி.

( அறம் )

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.''

(தி. கு. 34)

''அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.''

(தி. கு. 35)

''அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.''

(தி. கு. 76)

( அன்பு )

''அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.''

(தி. கு. 72)

( நட்பு )

''நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.''

(தி. கு. 784)

( அறிவு )

''அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.''

(தி. கு. 203)

''அறிவினல் ஆகுவ துண்டோ பிறிதினேய்
தந்நோய்போல் போற்ருக் கடை.''

(தி. கு. 315)

பேதை )

''ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்.''

(தி. கு. 834)

( அச்சம் )

''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.''

(தி. கு. 44)

''அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.''

(தி. கு. 366)

''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.''

(தி. கு. 428)

(நாணம்)

''கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.''

(தி. கு. 1011)

''பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி யென்னும் உலகு.

(தி. கு. 1015)

( சான்றாண்மை )

''அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால் பூன்றிய தூண்'

(தி. கு. 983)

''கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.''

(தி. கு. 981)

( தவம் )

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.''

(தி. கு. 261)

( உயர்குடிப் பிறப்பு )

''ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப் பிறந்தார்,''

(தி. கு. 952)

''நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.''
(தி. கு. 953

( ஈகை )

''வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.''
(தி. கு. 221

''இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.''
(தி. கு. 223

8. வள்ளுவர் காலத்துக்கு முந்தின காலத்தில் வழங்கிய கொள்கைகளில் பொய்யானவை பொய்த்துப்போகவும் மெய்யானவை நிலைத்து நிற்கவும், விளக்கம் அருளிய வித்தகர்.

''பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்
[லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே — முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.''
( தேனீக்குடிக் கீரனார்

''வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத் — தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி.''

(மதுரைப் பாலாசிரியனார்.)

9. தமிழை ஆரியத்திற்கு ஈடும் எடுப்புமாக்கிய
தனிப்பெருந் தமிழ்த்தந்தை.

''ஆரியமுஞ் செழ்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால் — ஆரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.''

(வண்ணக்கஞ் சாத்தனார்.)

''செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே — செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்.''

(வெள்ளி வீதியார்.)

''ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையை
போற்றி யுரைத்தேட்டின் புறத்தெழுதார் — ஏட்
[டெழுதி

வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.''

(கோதமனார்

10· நாகரிக அரசாங்கம் என்று இன்று கருதப்படும் அரசாங்க அமைப்புகளுக்கு ஒப்பும் உயர்வுமான அரசியல்நெறி அமைத்துத் தந்த அரசியல் மேதை.

''அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரணிரண்டொன் றொண்கூழ் — இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை.''

(போக்கியார்.

பொருட்பால் எழுபது அதிகாரங்களும் அரசியல் பற்றியவை. அவற்றிலுள்ள நுண்பொருள்களை யெல்லாம் எடுத்துக் கூறுவதற்கு இஃது இடமன்று. எனினும், இங்கொன்றும் அங்கொன்றுமாக இங்கு எடுத்துக் காட்டுவது அவசியமா கிறது.

(அரசாங்கம்)

''படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.''

(தி. கு. 381

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.''

(தி. கு. 385)

(அரசன் இயல்)

''அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.''

(தி. கு. 382.)

''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.''

(தி. கு. 383)

''காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.''

(தி. கு. 386)

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.''

(தி. கு. 517)

''நாடொறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.''

(தி. கு. 520)

(படை மாட்சி)

''கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும்
ஆற்றல் அதுவே படை.''

(தி. கு. 765

(ஒற்றுடல்)

''ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.''

(தி. கு. 588

''ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.''

(தி. கு. 589)

(அமைச்சர் திறன்)

''கருவியுங் காலமுஞ் ச ய்கையுஞ் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.''

(தி. கு. 631)

''வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்ட தமைச்சு.''

(தி. கு. 632)

(தூதுவர் இயல்பு)

''அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.''

(தி. கு. 682)

''அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.''

(தி. கு. 684)

( நாட்டின் சிறப்பு )

''இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு.''

(தி. கு. 737)

''நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு.''

(தி. கு. 739)

( நல்ல குடிகளின் இயல்பு)

''தள்ளா விளையுளும் தக்காருந் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.''

(தி. கு. 731)

''பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறை
[ வற்கு
இறையொருங்கு நேர்வது நாடு.''

(தி. கு. 733)

''பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

(தி. கு. 735)

## 11. அகப்பொருள் துறைகள் அனைத்துங்கண்ட அளப்பரும் அறிஞர்.

(சந்திப்பு நிலை)

''பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.''

(தி.கு. 108

''கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து.''

(தி. கு. 108

(நோக்கின் தன்மை)

''இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.''

(தி. கு. 109

''ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே யுள.''

(தி. கு. 109

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொ
[க
என்ன பயனு மில.''

(தி. கு. 110

(புணர்ச்சி இன்பம்)

''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.''

(தி. கு. 1101)

''பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.''

(தி. கு. 1102)

''அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.''

(தி. கு! 1110)

(கள்ளுங் காமமும்)

''உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.''

(தி. கு. 1201)

''உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.''

(தி. கு. 1281)

( காமமுந் தீயும் )

''நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்ருளிவள்.''

(தி. கு. 110

''தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.''

(தி. கு. 115

( ஊடலுங் கூடலும் )

''ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.''

(தி. கு. 110

''உணலினும் உண்ட தறலினிது; காமம்
புணர்தலின் ஊட லினிது.''

(தி. கு. 1326

''ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.''

(தி. கு. 1330

''ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலிற் காணப் படும்.''

(தி. கு. 1322)

(காதல் மலர்தல்)

''காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

(தி. கு. 1227)

(அலர் செய்தல்)

''ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.''

(தி. கு. 1147)

(காதலர் பிரிவு)

''செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.''

(தி. கு. 1151)

## 12. தொல்காப்பியர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றிய பொருள்நிறை புலவர்.

(மறைமொழி இன்னதென்பது)

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.''

(தொல்காப்பியம்)

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(தி. கு. 28)

(மக்களின் இலக்கணம்)

''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே.''

''மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.''

''மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.''

(தொல்காப்பியம்)

''புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

(தி. கு. 79)

''உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.''

(தி. கு. 993)

''ஊனுடை யெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.''

(தி. கு. 1012)

''அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்.''

(தி. கு. 997)

''மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.''

(தி. கு. 1071)

(உயர்ந்தோர் வழி உலகஞ் செல்லும்)

''வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான.''

(தொல். பொருள். 647)

''சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.''

(தி. கு. 27)

''உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.''

(தி. கு. 140)

## 13. வள்ளுவர் போதிக்கும் முறையிலும் வல்லுநர்.

தீயொழுக்கத்தில் பழகினவர்கள் அதையே வழக்கமாகக் கொள்வார்கள். பழக்கம் முதிர்ந்தால் வழக்கமாகிவிடும். வழக்கம் இயற்கைக்குச் சமம். ''அப்பியாசம் இரண்டாவது இயற்கை'' — [ **Practice is second nature** ] — என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. ஒருவர், வழக்கமாகி விட்ட தீயொழுக்கத்தை விட்டுவிடுவது கடினம். ஒரு தீயொழுக்கத்தை விடுவது கடினமாகுமானால், பல தீயொழுக்கங்களை விட்டுவிடுவது மிக மிகக் கடினமாகும்.

வள்ளுவர் மக்களின் மனப்பாங்கை நன்கறிந்தவர். ஆகையால், அவைகளில் ஒன்றை விட்டாலே போதும் என்று பொருள்படப் பல தீயொழுக்கங்களை ஒவ்வொன்ருகச் சுட்டிக் காட்டுகிருர். ஒரே சமயத்தில் பல தீயொழுக்கங்களை விட்டு விடுவது கடினமாகும் என்பதை உணர்ந்து அவ்வாறு கூறுகிருர்.

அவர் கூறும் முறையினைப் பின் வரும் குறள்களில் காண்கின்றோம்.

பிறர் மனைவியரைத் தீண்டுதலாகிய
செயற்குற்றம் ஒன்றை
விட்டாலே போதும்.

''அறன்வரையான் அல்ல செயினும் பிறனியலாள்
பெண்மை நயவாமை நன்று.''

(தி. கு. 150)

*2*

அழுக்காறு என்ற மனக்குற்றம் ஒன்றை
நீக்கினாலே போதும்.

''விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.''

(தி. கு. 162)

*3*

புறங்கூறுதல் என்ற சொற்குற்றம் ஒன்றை
நீக்கினாலே போதும்.

''அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.''

(தி. கு. 181)

## *4*

கொல்லுதலாகிய செயற்குற்றம் ஒன்றைமட்டும் விட்டுவிட்டாலே போதும்; அது முதல்தரமான நல்லதாகிவிடும்; மேலும், அது நல்ல வழியும் ஆகும்.

''ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.''

(தி. கு. 323)

''நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.''

(தி. கு. 324)

## *5*

களவு என்னும் செயற்குற்றம் ஒன்றைமட்டும் விட்டுவிட்டால், போதும் மேலுலகம் அவரைத் தள்ளாது.

''கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலே கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.''

(தி. கு. 290)

## *6*

கோபம் என்ற மனக்குற்றம் ஒன்றைமட்டும் விட்டு விட்டால் போதும், அதன்பின் அவர் நினைத்தது

எல்லாங் கைகூடும்; மேலும், துறவிகளுக்குச் சமமாக எண்ணப்படுவார் அவர்.

''உள்ளிய வெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்.''

(தி. கு. 309)

''இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.''

(தி. கு. 310)

தீயொழுக்கத்தை விட்டுவிடுவதற்கு ஒவ்வொன்றையும் சிறப்பித்துச் சொல்வது போலவே, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கும் ஒவ்வொன்ருகச் சிறப்பித்துக் கூறுகிருர். ஒன்றைப் பழகினபின் மற்ற நல்லொழுக்கங்கள் படிப்படியாக வந்துவிடும் என்ற மன இயல்பை அறிந்து அவ்வாறு கூறுகிருர்.

*1*

இனிய சொல்லாகப் பேசுதலாகிய வாக்கு நலம் ஒன்றைக் கடைப்பிடித்தால் போதும்; அறம் பெருகும்; அறம் அல்லவை தேயும்.

''அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.''

(தி. கு. 96)

## 2

ஐம்பொறிகளையும், ஐம்புலன்களையும் அடக்கியாளும்
மனப்பயிற்சி மட்டும் கைவந்தால் போதும், அது
ஏழுபிறப்புக்குங் காவலுடையதாகும்.

''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.''

(தி. கு. 126)

## 3

பொறுமை என்ற ஒன்றுமட்டும் மனத்தில் நிலைக்கவைத்து
விட்டால் போதும், அது துறவுப் பயன், உண்ணா
நோன்புப்பயன் ஆகிய இரண்டையுந் தரும்.

''துறந்தாரிற் றூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.''

(தி. கு. 159)

''உண்ணாது நோற்பார் பெரியார் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.''

(தி. கு. 160)

## 4

தனக்கு நேரிடுந் துன்பங்களுக்காக மனச் சஞ்சலம்
அடையாமல் பொறுத்துக் கொள்ளுதலும்,
பிறருக்குத் துன்பம் விளைக்கக்கூடாது
என்ற தீர்மானமுமாகிய இவ்விரண்டு

மனப்பண்புகளும் உருவாகிவிட்டால்
போதும், அதுவே தவத்தின்
உருவாகிவிடும்.

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.''

(தி. கு. 161)

*5*

வாய்மை என்ற வாக்குச்செயல் ஒன்றுமட்டும் ஒருவரிடம் நிலைத்துவிடுமானால், அவர் தவம் தானம் செய்பவர்களிலும் உயர்ந்தவராகிவிடுவார்; மேலும் அவர் பெரியோர்கள் உள்ளத்திலும் உறைபவராவர்.

''மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு
தானஞ்செய் வாரில் தலை.''

(தி. கு. 295)

''உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.''

(தி. கு. 294)

*குறிப்பு :-*

இதை அறியாமல் சிலர் - திருள்ளுவர் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொன்றைச் சிறப்பித்துக் கூறும் சந்தர்ப்பவாதி என்கின்றனர். மக்கள் நல்வழிப்படுவதற்கு

மனோதத்துவ முறையில் போதிக்கும் போதனா முறை என்பதனை அவர்கள் அறியாததே அவ்வாறு சொல்வதற்கு காரணம்.

* * *

இவ்வளவு சிறப்பியல்புகள் வாய்ந்த திருவள்ளுவ பெயரால் அமைக்கப்படும் ஆலயத்தின் வாயிலாய் இந்நூலாசிரியர் கூறும் திட்டங்கள் செயலாக வேண்டுமானால் பின்வரும் சூழ்நிலைகள் உருவாக வேண்டும் :—

### 1. உலகம் போகிற போக்கைக் கவனிக்கும் சிந்தனை உருவாக வேண்டும்.

இந்த உலகம் எவ்வாறு தோன்றிற்று? உயிரினங்கள் உற்பவம் எப்படி? பிற உயிரினங்களினின்றும் மகன் எவ்வெவ் வகைகளில் உயர்ந்தவன்? மனித வர்க்கம் தொகையிலும்—அறிவிலும்—நாகரிகத்திலும் வளர்ச்சியடைந்த வரலாறு என்ன? அறிவிலும் நாகரிகத்திலும் வளர்ச்சியடைந்த அளவு மக்களிடம் ''மக்கட் பண்பு''—(அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர் தி. கு. 997.) வளர்ச்சியடைந்திருக்கிறதா? சிங்கம், புலி, பாம்பு முதலிய பயங்கர பிராணிகள்கூட தத்தம் இனத்தைக் கொன்று குவியாதிருக்கும்போது, மனித இனம் மட்டும் தன் இனத்தையே கொன்று நாசம் செய்வது மனித இனம் குறிப்பிட்ட மற்ற இனங்களைவிடப் பண்பில் உயர்ந்தது என்பதைக் காட்டுமா, தாழ்ந்தது என்பதைக் காட்டுமா? விஞ்ஞான அறிவின் திறமையினால் மனித இனம்

னுபவித்துவரும் வசதிகளும், இன்பங்களும் மிகமிகச் சுருங்கிய தாகையினரிடமே நிற்க, பெரும்பான்மை மக்கள் உண்ண ணவுக்கும், உடுக்க உடைக்கும், உறங்க உறையுளுக்கும் வதிப்படும் நிலை அமைந்திருப்பதற்குக் காரணம் அவர்கள் று? அரசாங்க அமைப்பா? பொருளியல் நெறிமுறையா? மயவாதிகளால் கூறப்படும் கடவுள் செயலா? இவைகளிலும் வருன சூழ்நிலைகளா? இவைகளில் சில பல சேர்ந்தா?

ஆகாயத்தில் பறந்துசெல்லும் ஆற்றல் தேவர்களுக்கும் ஞானிகளுக்கும் மட்டும் இருந்ததாகப் புராணங்களில் படிக் றோம். இப்போது விஞ்ஞானிகள் அவ்வாறு செல்லும் வழியைக் ண்டுபிடித்து, சாதாரண மக்களும் ஆகாயத்தில் செல்ல வசதி செய்திருக்கிறார்கள்.

தூர இடத்தில் நடக்கும் செயல்களை அறியும் சக்தி ஞானிகளுக்கு மட்டுமே இருந்ததாகச் சமய நூல்களில் கேட் றோம். இப்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்த கருவிகள் மலம் யாவரும் அறியக்கூடியதாயிருக்கிறது.

எனினும், கழுகுகளும், பருந்துகளும் ஆகாயத்தில் றந்து திரிந்தும், கீழே தரையில் செத்துக்கிடக்கும் பிராணிகளின் டல்களைக் கூர்ந்து நோக்கி அவற்றைக் கைப்பற்றக் கீழே றங்குவதுபோல—தேவர்களும், ஞானிகளும் மட்டும் அனுப த்து வந்ததாகக் கூறப்படும் உயர்தரமான நலன்களைச் ாதாரண மக்களும் அனுபவிக்கத்தக்க சாதனங்களை விஞ்ஞானி ள் கண்டுபிடித்தும்—மக்களை மக்கள் சுரண்டிப் பிழைக்கும் த்தரமான முறைகளுக்கே அவைகள் பயன்படுவதை நோக்கும் ாது விஞ்ஞான அறிவின் வளர்ச்சியைக் கண்டு பெருமைப்பட டமில்லாதிருக்கிறது. காரணம் என்ன?

மேலும், சந்திர மண்டலத்திற்கும், செவ்வாய் மண்ட த்திற்கும் போய் வரும்படியான சக்தியை விஞ்ஞானம்

அளித்தும், உலகத்தின் நாறுதிசைகளிலும் வறுமைப்பிணியி வாடும் மக்களிடம் சென்று அவர்கள் குறைகளைப் போக்க பயன்படாமற் போனது வருந்தத்தக்கதே. இவைகளைச் சிந்தி வேண்டும்.

2. அரசாங்க அமைப்புகள் மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்படுகிற விதம் பற்றிய ஆராய்ச்சி வேண்டும்.

''அரசியல் முறை'' முற்றும் திருத்தப்பட வேண்டு, உலகப் பொது அரசாங்கம் ஏற்படவேண்டும். அகில உ மக்களும் அந்த அரசாங்கத்தின் குடிகளாக வேண்டும். உல திலுள்ள எல்லா அரசாங்கங்களும் உலகப் பொது அரசாங்கத் மத்திய அரசாங்கமாகக் கொண்டு நடைபெறவேண்டும்.

அப்படியாகும்போது வெளிநாட்டுப் படையெடுப களுக்கு ஒவ்வொரு அரசாங்கமும் வைத்திருக்கும் படைவேண்டி தில்லை. அதற்கான கருவிகளும் தேவையில்லை. உள்நாட்டி ஏற்படும் குழப்பங்களை அடக்குவதற்காக மட்டும் போலீ இலாகா இருந்தால் போதும். இதனுல் அரசாங்கச் செலவி பாதி குறைந்துவிடும்.

படையினரில் வயது முதிர்ந்தவர்களுக்குப் பென்ஷ ஏற்பாடு செய்துவிட்டு, மற்றையோரையெல்லாம் பொரு உற்பத்தி வேலைகளில் ஈடுபடுத்தலாம்.

''பொருளியலில்'' பெரும் மாற்றம் ஏற்படவேண்டு ''உழைப்புக்குத் தக்க ஊதியம்'' என்ற கொள்கை முதலி

அனுஷ்டிக்கப்படவேண்டும். பின்பு ''திறமைக்குத் தக்க வேலை வேலைக்குத் தக்க பொருள்'' என்ற முறை கைக்கொள்ளப்பட வேண்டும். உழைப்பவன் ஊணுக்கும், உடைக்கும் இடர்ப்பட லாகாது. உழையாதவன் பெரும் சுகபோகங்களை அனுபவிக்க முடியிருக்கலாகாது.

தனியொருவனுக்கு உணவில்லையேல், சகத்தினர் அனைவரும் அதற்குப் பொறுப்பாகவேண்டும்.

இந்தக் காரியங்களையெல்லாம் ஆலோசனை செய்து செயலுக்குக் கொண்டுவரப் பல நாட்டுப் பேரறிஞர்களும், திரு வள்ளுவர் அறிவு ஆலயத்தில் கூடவேண்டும்.

*

## 3. அரசியல் கட்சிகள் மக்களுக்குச் செய்யும் நன்மைகள் யாவை ?

அரசியல் கட்சிகள் மக்களுக்கு நன்மை செய்வதாக முறைகூவுகின்றன; அரசாங்கத்தைக் கைப்பற்ற விழைகின்றன.

மக்களுக்கு நன்மை செய்யத் திட்டமிட்டிருக்கும் செயல் அரசாங்கத்தைக் கொண்டுதான் செய்யமுடியும் என்பது ஒவ்வொரு கட்சியின் பிரசாரத்திலும் வெளிப்பட்டுக்கொண்டிருக் கிறது. அரசாங்கத்தைக் கைப்பற்ருமல் ஒரு நன்மையும் செய்ய முடியாது என்பது அதன் மறுதலைப் பொருள்.

அதனல் தேர்தல் காலங்களில் ஒவ்வொரு கட்சியும் தத்தம் கொள்கைகளைப் போற்றியும், பிற கட்சிகளின் கொள்கை

களைத் தூற்றியும் சொன்மாரி பொழியவேண்டிய நிலைமை ஏற்படு கிறது. அளவற்ற பணமும், சக்தியும் பலவகைகளில் செலவ கிறது. வெற்றிபெற்ற கட்சி, அரசாங்கத்தைக் கைப்பற்றுகிறது அதனால் தனிப்பட்ட சிலருக்கு நன்மை கிடைக்கிறது. பெரு பான்மையான கட்சி உறுப்பினர்கள் அவர்களைப் பார்த்து மகிழ்ச் யடைந்து திருப்தியுறுகின்றனர். தோல்வியுற்ற கட்சியோ, சட் சபையில் இருக்கப்பெற்றும் தங்கள் கட்சிக் கொள்கையை புகுத்தமுடியாமல் ஏமாற்றம் அடைகின்றது. தேர்தலுக்கா செலவிடப்பட்ட பணமும், சக்தியும் வீண் விரையமாகிறது இவ்வாறு பலதடவை தோல்வியுற்றும், வீண்விரையமானவற்றை பற்றிக் கவலைகொள்ளாமல், கட்சிக்கு உறுப்பினர் மிகுதியாவதை மட்டும் முன்னிறுத்தித் திருப்தியடைந்துகொள்கிறது. உறு பினர்களிற் சிலர் ஆயாசமடைகின்றனர். பலரோ மேலும் வீ கொள்கின்றனர். இவ்வாறு கட்சிகளின் போக்கு போய் கொண்டிருக்கிறது.

கட்சி உறுப்பினர்களுக்கு, கட்சிப் பிரசாரகர்களின் சாதுர்யப் பேச்சுகளினால் வீறு ஏற்படுகிறதே தவிர வேறு ஒன்று ஏற்படுகிறதாகத் தெரியவில்லை.

அரசு என்றால் என்ன? அதன் உற்பத்தியைப் பற்றிய வரலாறு என்ன? அதன் பரிணாமம் என்ன? அரசுகளின் பலவகை வடிவங்கள் யாவை? வடிவங்களின் பேதங்களுக்குத் தக்கவாறு அவற்றின் பயன் எவ்வாறு பேதப்படுகின்றன? உலக அரசுகளில் எவ்வெவ் நாட்டு அரசுகள் எவ்வெவ் வடிவங்களில் செயல்புரி கின்றன? எவ்வெவ் நாட்டு அரசுகள் காலதேச வர்த்தமானங் களுக்கிணங்க தத்தம் வடிவங்களை மாற்றிக்கொண்டிருக்கின்றன? அரசுக்கும் குடிக்கும் உள்ள தொடர்பென்ன? கோல் என்றால் என்ன? செங்கோல், கொடுங்கோல் என்று தமிழ் நூல்களில் சிறப்பாகத் திருக்குறளில் சொல்லப்பட்டிருப்பவை எவற்றைப் பற்றியவை? செங்கோல், கொடுங்கோல் இவைகளைப் பற்றிய பழைய கொள்கைகளுக்கும், இக்காலக் கொள்கைகளுக்கும் உரிய பேதம் என்ன? அரசியலுக்கும், பொருளியலுக்கும் உள்ள

தொடர்பென்ன? வள்ளுவர் "பொருட்பால்" என்று பெயர் கொடுத்துக்கொண்டு, அதன் எழுபது அதிகாரங்களையும் அரசியல் முறையிலேயே விவரிப்பதன் கருத்தென்ன? பண்ட மாற்று இருந்த காலத்தில் பொருள் பரவியிருந்த நிலைக்கும் நாணய ஒழுங்கு ஏற்பட்ட பின் பொருள் பரவியிருக்கும் நிலைக்கும் உள்ள வித்தியாசமென்ன? நாணயம் செய்த நாணயக் கேடுகள் என்னென்ன?

இவை போன்ற அரசியல் அரிச்சுவடிப் பாடங்களை யேனும் கட்சி உறுப்பினர்கள் கற்றுக்கொள்ளும் வாய்ப்பிருந் தாலும் அவர்கள் கட்சியில் ஈடுபட்டதற்குப் பயன் உண்டெனக் கூறலாம்.

இவைகளைப் பல அரசியல் கட்சி உறுப்பினர்கள் சிந்திக்க வண்டும். "திருவள்ளுவர் அறிவு ஆலயம்" கட்டும் திட்டத்தில் தொண்டர் படையில் சேர்ந்து, வள்ளுவர் தரும் ஆயுதத்தைத் தரித்துக்கொண்டு (தி. கு. 985) பணிசெய்வது பயனுடையது ஆகாதா என்றும் சிந்திக்கலாம்.

*

## 4. தன் இன்பத்தை விரும்பாமல் உழைப்பை விரும்பும் அன்பர் குழு அமையவேண்டும்.

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்" (தி. கு. 615)

பிறர் துன்பத்தைப் போக்குபவர் யாரெனில்; தனக்கு

---

* "அரசிய லவையங் கமைச்சிய லீரைந்
துருவல் லரணிரன் டொன்றெண்கூ—ழிருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை" (போக்கியார்)

இன்பம் வேண்டுமென்று விரும்பாமல், உழைப்பை மட்டு விரும்பும் இயல்புடையவர்களே என்று வள்ளுவர் திட்டமிட்டு கூறுகிறார்.

இக்குறளிலிருந்து நேராக அறியக்கூடியது மேற்கண் ஒரு பொருள்தான். பின்னும் இரண்டு பொருள்கள் மறைந் நிற்கின்றன. அவையாவன :—

1. உழைப்பையும் விரும்பி அதே அளவாய் இன்பத்தை யும் விரும்புபவர் பிறர் துன்பத்தைத் துடைக்கவும் மாட்டார் பிறருக்குத் துன்பத்தைப் படைக்கவும் மாட்டார்.

2. தான் உழைப்பதை விரும்பாமல், தனக்கு இன்ப வரவேண்டுமென்று விரும்புபவர் பிறருக்குத் துன்பத்தை உண்டாக்குவார்.

உலகத்தில் பலருக்குத் துன்பம் உண்டாவதற்கு காரணம் தனக்குப் பலவகையான இன்பம் வேண்டுமென்று விரும்புபவர்கள் மிகுதிப்படுவதேயாம். அதனால், திருக்குறளை பின்வருமாறு மாற்றியமைக்க வேண்டியதிருக்கிறது:—

" இன்பம் விழைவான் வினைவிழையான் தன்கேளிர்
துன்பம் படைத்தூன்றும் தூண் "

உலகத்தில் பலர் துன்பப்படுவதைக் காண்கிறோம் அவர்கள் துன்பத்தைத் துடைக்க விரும்புபவர்கள் —தனக்கு இன்பத்தை விரும்பாமல் உழைப்பை மட்டும் விரும்பும் இயல் உடையவர்களாக வேண்டும். அத்தன்மை வாய்ந்தவர்கள் திரளவேண்டும் அறிவாலயத்தில்.

## 5. உலகப் போக்கை எதிர்த்துச் செல்லும் வீரமும், ஈரமும் ஒருங்கே பொருந்திய தீரர் படை ஒன்று உருவாகவேண்டும்.

உலகமோ தீய முறையில் போய்க் கொண்டிருக்கிறது. அதனை உணர்ந்து, அதனை எதிர்த்துச்செல்லும் தீரம் பலருக்கு உண்டாவதில்லை.

செத்த மீன்கள் நீரோடும் திசையில் போய்க்கொண்ருக்கும்; உயிருள்ள மீன்களோ எதிர்த் திசையில் செல்லும். துபோல தீமையை எதிர்க்கும் தீரர்கள் தீய முறையில் போய்க்காண்டிருக்கும் உலகத்தை எதிர்த்துச் செல்வார்கள். த்தகைய தீரர் படை ஒன்று உருவாகவேண்டும். அவர்கள் மையை எதிர்ப்பதனால் உண்டாகும் துன்பத்தைப் பொறுத்துக்காள்ளவேண்டும். தன் உயிரையும் இழக்கத் தயாராயிருக்கவண்டும்.

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

(தி. கு. 669.)

*

6. பல அரசாங்க அமைச்சர்களும், அரசியல் நிபுணர்களும் ஆலோசனை வழங்கவேண்டும்.

உலக மக்கள் அனைவரும் இன்புற்றிருக்கத் திட்டம் ருக்கவும், செயல்படுத்தவும்—அரசாங்கத்தை நடத்தி அனுபவமுள்ள அமைச்சர்களும் அரசியல் நிபுணர்களும் ஆலோசனை வழங்குவது இன்றியமையாதது.

அமைச்சர்கள் தாங்கள் தங்கள் அரசாங்கங்களில் நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட எதிர்ப்புகளையும் அவைகளைச் செவ்வையான முறையில் சரிப்படுத்தி நிறைவேற்றக் கையாண்ட முறைகளையும் அறிவார்கள். ஆகையால், அவர்கள் ஆலோசனை அவசியம் தேவைப்படும்.

அரசியல் நிபுணர்கள் ஒரு அரசாங்கத்தின் அமைப்பு முறைகளை அறிவார்கள். அகில உலக அரசாங்க அமைப்புக்கும் அவர்கள் ஆலோசனை வழங்கக்கூடும்.

## 7. திருக்குறள் சிறப்பாராய்ச்சிப் புலவர்கள் கூட்டுறவும் வேண்டும்.

திருக்குறள் சிறப்பாராய்ச்சிப் புலவர்கள் ஆசிரியரின் திட்டத்திற்கு வேண்டிய முறைகளை வகுத்துக் கொடுப்பார்கள். வள்ளுவரின் அரசியல் நெறியையும் விளக்குவார்கள்.

* * *

இவ்வாருன சூழ்நிலைகள் ஏற்படவேண்டும். இதை வாசிக்கும் பெரியோர்களும், மதிப்புரை வழங்கும் பத்திரிகை ஆசிரியர்களும் முயன்ருல், சூழ்நிலைகள் உருவாவது உறுதி.

சூழ்நிலைகள் உருவாகிவிட்டால் இந்நூலாசிரியர் எதிர்பார்க்கும் ஆலயம் எழும்புவது நிச்சயம். அதன் சார்பான திட்டங்கள் நிறைவேறுவதும் திண்ணம்.

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதேயல்லால்
வேருென் றறியேன் பராபரமே,''

சா. வேதமுத்து.

# திருவள்ளுவர் அறிவு ஆலயம்

## [ஆசிரியர் — குறள் ஒளி]

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.''

உலகப் பொது நூல்:

உலக முழு நூல்:

உலகப் பொதுமகன்:

அகரமாகிய முதல் எழுத்தில் தொடங்கி ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறள்மணிகளைத் தந்தவர் இந்த உலகினில் நம் தமிழகத்தில் தோன்றிய உலக மேதையான திருவள்ளுவராகும். அவர் தோற்றுவித்த இந்த நூல் ஒப்பற்ற ஒன்று. உலகினில் தோன்றிய பேரறிஞர்கள் ஆக்கிய இலக்கியங்களுக்கெல்லாம் முதன்மையாகப் போற்றப்படுகிறது. இஃது என் கருத்து அன்று; ஆன்றோர் கருத்து. இதனை இந்நூலின்கண் முற்பக்கங்களில் படித்திருப்பீர்கள்.

திருக்குறள் தமிழ்நிலத்தின் சொந்தச்சொத்து எனக் கொண்டாலும் அது இவ்வுலகின் பொதுச் சொத்தாகும். வள்ளுவரும் தமிழ்த்தாயின் சேயானாலும், அவர் செயலை நோக்கி, இவ்வுலகமாதாவின் சேயெனல் பொருந்தும். எனவேதான், நமது தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரும், வள்ளுவரையும் குறளையும்பற்றிக் கூறுமிடத்து,

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.''

— என்றார்.

ஆம், வள்ளுவர் திருக்குறள் வழியாய் அறவுரையும், அறிவுரையும் கூறியது நம் நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல; உலகத்திலுள்ள அத்தனை நாட்டு மக்களுக்குமாகும். ஆதலால்தான் உலகப் பெரியார்கள் அனைவரும் அன்றுமுதல் இன்றுவரை வள்ளுவரையும் அவர் இயற்றிய குறளையும் போற்றிப் புகழ்கிறார்கள். அதனால் தமிழ் நாட்டுக்கும் தமிழ்மக்களுக்கும் அப்புகழ்ச்சி பங்காகிறது.

வள்ளுவர் காலத்திலுள்ள மக்களுக்கு என்னென்ன பண்பாடுகள் இருந்தனவோ — இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினாரோ அத்தனையும் குறளில் குறிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளை இக்காலத்திலுள்ள மக்களும் போற்றுகின்றார்கள். ஆதலால், மனித வாழ்க்கையின் அளவுகோல் திருக்குறள் எனலாம். மக்களா, மாக்களா எனத் தெரிந்துகொள்ள இந்த அளவு எக்காலத்திற்கும் பயன்படும்.

## திருவள்ளுவரும் திருக்குறளும்

திருவள்ளுவர் கடைச் சங்க காலத்தவர் என்று தமிழ் நூல் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள். கடைச் சங்ககாலத் தொகை நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று சொல்லப்படும் சங்க இலக்கியங்களுள் திருவள்ளுவர் காலப் புலவர்கள் பலர் பாடிய பாடல்கள் இருக்க, வள்ளுவர் பாடல்கள் ஒன்றுங்கூட அவைகளில் காணப்படவில்லை. எனவே, தம் காலத்தையுங் கருத்தையும் பிறவற்றில் செலுத்தாமல் 'திருக்குறள்'

என்ற ஒப்பற்ற நூலொன்று செய்யவேண்டுமென்று திட்டமிட்டுச் செய்ததாகத் தெரிகிறது.

தம் வாழ்நாளின் கடைசிப் பாகத்தில் இந்நூலை ஒரு பூரண நூலாக ஆக்கியிருக்கவேண்டுமென்றும், அதற்குமுன், தம் நூலறிவு, மதிநுட்பம் ஆகியவைகளைப் பயன்படுத்தி, கருத்துக்களைக் குறித்து வைத்திருக்க வேண்டுமென்றும் திருக்குறளை நுணுகி ஆராய்ந்த தமிழறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மேலும், அவர் அந்நூலைச் செய்யும்போது தமிழ் நாட்டவரை மட்டுமல்லாது, அகில உலக மக்களையும் முன்வைத்தும், அக்காலத்துக்கு மட்டுமல்லாது எக்காலத்துக்கும் பொருந்தும்படியாகவும் செய்யக் கருதியிருக்க வேண்டுமென்றுங் கருதுகிறார்கள்.

அதனால்தான், திருக்குறள் பொதுமறையென்றும், மக்கள் வாழ்க்கை நூலென்றும் போற்றிப் புகழப்படுகிறது.

## *திருவள்ளுவரும், அவரது நினைவுச் சின்னமும்*

உலகம் போற்றும் உலகப் பொதுநூல் அருளிய உலக மேதைக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுவதென்றால் — அது, உலகம் அறியக் கூடியதும், உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதும், உலக மக்கள் அனைவருடைய ஒத்துழைப்பைப் பெற்றதும், உலகப் பேரறிஞர்கள் அனைவருக்கும் நினைவுச் சின்னங்கள் அமைந்ததும், உலக மக்கள் அனைவரும் வந்து பார்க்கத் தக்க வசதியுடையதும், உலக அறிஞர்கள் கூடி உலகச் சிக்கல்களைத் தீர்க்கக் கூடிய மாபெரும் மண்டபம் அமைந்ததும், உலக அறிவு

நூல்கள் இடம் பெறும் மாபெரும் நூல்நிலையம் உடையதும், இன்னும் பல சிறப்புகள் உடையதுமான பெரிய ஆலயமாக விளங்க வேண்டாமா? அப்படி அமைந்தால்தான் திருவள்ளு வருக்கு — அவர் மேதைக்கு — தகுந்த நினைவுச் சின்னமாகும்.

அத்தகைய வசதியுடைய நினைவுச் சின்னம் அமைக்கத் தக்க இடம் கன்னியாகுமரிப் பகுதியே என்று யான் தீர்மானித் தேன். அதை, 'சிந்தனை தோன்றிய விதம்' என்னும் பிரிவில் குறிப்பிட்டிருக்கிறேன்.

## திருவள்ளுவர் அறிவு ஆலயம் அதன் அமைப்பு முறைகள்

அறிவாலயம் சுமார் மூன்று மைல் சுற்றளவுள்ள கோட்டைக்குள் அமைய வேண்டும்.

ஆலயம் மூன்று பெரிய மாடிகள் கொண்டதாய், அறம் பொருள், இன்பம் என்னும் பெயர் தாங்கியதாய், அவ்வவ் மாடி களின் உட்புறச் சுவர்களில், அவ்வப் பால்களின் குறள்கள் வர்ண எழுத்துக்களால் எழுதப்படும் வசதியுடையதாய் இருக்கவேண் டும். சித்தரிக்க வசதியுடைய குறள்களை விளக்கும் சித்திரங் களும் அமைதல் நலம்.

ஆலயத்தின் மூன்று மாடிகளுஞ் சேர்ந்து 330 அடி உயரம் இருக்கவேண்டும். 1330 குறள்களையும் நினைவுறுத்தும் முறையில் 1330 சிறு சிறு அலுவல் அறைகளும், 1330 தூண் களும், 1330 படிகளும் அதில் அமைய வேண்டும்.

ஆலயத்துக் கோட்டைச் சுவர்களின் உட்புறத்தில் கோட்டைச் சுவரைச் சேர்ந்து 1330 வீடுகள் சுற்றிலும் அமைந்து இருக்க அறிவாலயம் நடுநாயகமாய் இலங்கும். அந்த 1330

வீடுகளும் மும்மூன்று மாடிகள் உடையனவாகவும், ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு பெரியவர்கள் பெயராலும் விளங்கவேண்டும்.* வாசுகியம்மையார் இல்லம், பாரதியார் இல்லம், காந்தி இல்லம், கஸ்தூரி இல்லம் போல்வன.

## அறிவாலயமும், பல்கலைக் கழகமும்

திருவள்ளுவர் அறிவாலயத்தில் சிறந்ததொரு பல்கலைக் கழகம் நடைபெற வேண்டும். பல்கலைக் கழகக் கல்வித் திட்டங்களில் — சாதி சமய வேற்றுமைகளையும், மொழி வேற்றுமைகளையும் வேரறுக்கும் அம்சங்கள் இடம் பெற வேண்டும்.

உலக நாகரிக நாடுகளிலுள்ள பல்வேறு தொழில் நுணுக்க அம்சங்களும் பாடத் திட்டங்களில் அமைந்திருக்க வேண்டும். பாடங்கள் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட வேண்டும். ஆனால்,

---

* வ. உ. சிதம்பரனார், படேல், திருப்பூர் குமரன், எம். சி. ராஜா, பன்னீர் செல்வம், மணிமேகலை, ஔவை, கண்ணகி, கோப்பெருந்தேவி, மாணிக்கவாசகர், சுந்தரர், சம்பந்தர், ஷேக்ஸ் பியர், பிளேட்டோ, திரு. வி. க., சாக்ரடீஸ்; சுபாஸ் போஸ், இராமலிங்க அடிகளார், கால்டுவெல், ஜி. யூ. போப், மறைமலை அடிகள், இங்கர்சால், மார்டீன் லூதர், லெனின், மோதிலால் நேரு, ஸ்டாலின், வீரமா முனிவர், விவேகானந்தர், இராமகிருஷ்ணர், பனகால் அரசர், தியாகராயர், அம்பேத்கார், தொல்காப்பியர், பவணந்தியார், மயிலைநாதர், நாகம்மையார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், மணக்குடவர், தருமர் முதலிய பல பெரியவர்கள் பெயர்களும் இடலாம்.

குறள் தமிழிலேயே கற்பிக்கப்பட வேண்டும். திருக்குறளைக் கற்கும் அளவுக்குத் தமிழ் அறிவு வளம் பெறுதல் நலம்.

## நூல் நிலையமும் வாசக சாலையும்

அறிவாலயத்தில் முதற்பகுதியில், அதாவது முதல் மாடியில் பெரியதொரு நூல் நிலையம் இருக்கவேண்டும். நூல் நிலையத்தில் மக்களுக்கு மெய்யறிவை வளர்க்கத் தக்கனவும், மக்களது ஒற்றுமைக்கு உதவியாகக் கூடியனவும், சிறந்த பண்பாடுகளை உருவாக்கக் கூடியனவுமான சிறந்த நூல்களே பொறுக்கி எடுத்து வைக்கப்பட வேண்டும். மூட நம்பிக்கைகளை உண்டாக்கும் நூல்கள் அங்கு இடம் பெறலாகாது. இங்கர்சால் சொல்வதுபோல் மூட நம்பிக்கைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட வேண்டும்.

அவர் சொல்வதாவது :

''சிந்தனை சந்தேகத்தை வளர்க்கும்
சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கும்
ஆராய்ச்சி மெய்யறிவை வளர்க்கும்
மெய்யறிவு மூடநம்பிக்கையைக்
குழி தோண்டிப் புதைக்கும்.''

நூல் நிலையத்தில் முதற் பிரிவில் — திருக்குறள் பற்றிய நூல்கள் இடம் பெற வேண்டும்.

தமிழில் வெளியான திருக்குறட் பதிப்புகள், உரைகள், அது சம்பந்தமான ஆராய்ச்சிகள் இவைகள் எத்தனை உண்டோ, அத்தனையிலும் வகைக்கு அவ்வைந்து பிரதிகள் இருக்க வேண்டும்.

அயல் மொழிகளில் பெயர்க்கப்பட்ட திருக்குறள் மூலங்கள், ஆராய்ச்சிகள், உரைகள் முதலியவைகள் எத்தனை பாஷைகளில் உண்டோ, அத்தனை பாஷை நூல்களும் வர வழைக்கப்பட்டு முறையாக அமைக்கப்பட வேண்டும்.

இரண்டாம் பிரிவில், மக்கள் வரலாற்று நூல்கள் ஒவ்வொரு மொழியிலும் எத்தனை உண்டோ அத்தனையும் இருத்தல் வேண்டும். எல்லா மொழிகளிலும் இருக்கவேண்டும்.

மூன்றும் பிரிவில், — என்சைக்ளோபேடியா* என்னும் பெயருடைய நூல்களில் பலவகைப்பட்டவைகளும் இருக்கை பெறல் வேண்டும்.

நான்காம் பிரிவில், மொழி வரலாற்று நூல்கள் பல மொழிகளிலும் உள்ள பல புத்தகங்களும் இருத்தல் வேண்டும்.

ஐந்தாம் பிரிவில், தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய சிறந்த மொழிகளின் இலக்கண நூல்கள் இடம் பெறல் வேண்டும்.

ஆறும் பிரிவில், பூகோள நூல்களும், பூமிக்குட்படு பொருள்விளக்க நூல்களும் இருத்தல் வேண்டும்.

ஏழாவது பிரிவில், பல நாட்டு வான நூல்களும், பல வகைப்பட்டவைகளும் இடம் பெறுதல் வேண்டும்.

எட்டாவது பிரிவில், தாவர நூல்களும், ஒன்பதாவது பிரிவில், பிராணி நூல்களும், பத்தாவது பிரிவில், மனித உடற் கூற்று நூல்களும் அமைய வேண்டும்.

---

* Encyclopadia — Britanica.
,, — Catholic.
,, — Swedish.
,, — Germania.

பதினோராவது பிரிவில், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட பலவகை நூல்கள் அமைய வேண்டும்.

பன்னிரண்டாவது பிரிவில், மூட நம்பிக்கைகளை ஆதரிக் காதவை என்று பரிசோதனைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பட்ட தமிழ் இலக்கியங்கள், பிறமொழி இலக்கியங்கள் இருக்க வேண்டும்.

மற்ற வகை நூல்கள் செயற்குழுவினரால் தேர்ந்து எடுக்கப்படும்.

வாசக சாலையில் தினப்பத்திரிகைகள் தமிழ், ஆங்கில மொழிகளிலுள்ளவைகள் வரவேண்டும்.

வாரப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிறந்தவைகளே இருக்க வேண்டும்.

## அறிவாலயமும் அச்சகமும்

அறிவாலயத்தில் சிறந்த அச்சகமொன்று அமைக்கப் படல் வேண்டும். மாதப்பத்திரிகையுந் தினப்பத்திரிகையும் அதில் இருந்து வெளியிடப்படும். ''திருவள்ளுவர்'' என்னும் பெயர் அதற்கு இடலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவை நடை பெறும். திருவள்ளுவர் அறிவாலயச் செயல் முறைகளுக்குப் பாதி இடமும், திருக்குறள் விரிவுரைகளுக்கும், மற்ற அறிவுக் கட்டுரைகளுக்குப் பாதி இடமும் ஒதுக்கப்படும்.

புத்தக ரூபமான சில வெளியீடுகளும் அதிலிருந்து வெளி யிடப்படலாம். பல்கலைக் கழகத்திற்கு வேண்டிய புத்தகங்களும் அதிலிருந்தே பிரசுரஞ் செய்யப்படலாம்.

## அறிவாலயமும் திருவள்ளுவர் சபையும்

உலகத்தில் எத்தனையோ சபைகள், சங்கங்கள் செயல் பட்டு வருகின்றன. ஆனால், உலக மாதாவின் தனிப்பெரும் மகன் திருவள்ளுவர் பெயரால், உகல மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு சபை ஏற்படாதிருப்பது ஒரு பெருங்குறையே. ''திருவள்ளுவர் உலகப் பொதுச் சபை'' என்னும் பெய ரால் ஒரு சபை ஏற்படுத்தி, நடத்தி வரவேண்டும்.

அச்சபையின் தலைமைஸ்தானம் அறிவாலயத்தில் இருக்கும். கிளைச் சபைகள் பல நாடுகளிலும் அமைக்கப்மட்டிருக் கும். வருஷம் ஒரு முறை ஒவ்வொரு நாட்டிலும் ஆண்டு விழாக் கொண்டாடப்படும். பத்தாண்டுகளுக்கு ஒரு முறை உலகமக்கள் அனைவரும் அறிவாலயத்தில் ஒன்றுசேர்ந்து ஒரு விழாக் கொண்டாடப்படலாம்.

அது சமயம் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்து உலக ஒற்றுமை வளர்ச்சியைப்பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்து, மேற்கொண்டு செய்ய வேண்டியவைகளைத் திட்ட மிடுவது நலம் பயக்கும்.

## தலைமை ஆலயமும் கிளை ஆலயங்களும்

அறிவாலயமும், கிளை ஆலயங்களும் தொடர்புடையன வாய் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு ஊர் அல்லது நகரிலும் திருவள்ளுவர் ஆலயம் அமைய வேண்டும். அவ்வாலயத்தில் குறள் ஓதப்படும். ஓது வா மூர்த்திகள் குறளைக் கருத்துச் சிதையாத முறையில் இராகமும் தாளமும் அமைத்துப் பாடுவார்கள். ஒவ்வொரு நாளும் மாலை எட்டு மணிக்கு இது நடைபெறும்.

சமய ஆலயங்களில்போல் பூஜை நைவேத்தியங்கள் நடைபெறா. சமய சாதி வேற்றுமை காரணமாகச் சிலர் சமய

ஆலயங்களில் போகக் கூடாது என்றிருப்பதைப்போல் வள்ளுவர் ஆலயத்தில் இராது. எல்லாச் சாதிக்காரருக்கும் — சமயக்காரருக்கும் அங்கு இடம்உண்டு. எல்லோரும் அங்கு நடக்கும் நற்சொற்களைக்கேட்க உரிமையுண்டு. சமயப் பற்றுக்குஞ் சமய வெறுப்புக்கும்அங்கு இடமிராது. அமைதியான முறையில் - கடவுள் வாழ்த்துப்பாடலைப்பாடி வழிபாடு செய்யலாம். எவ்விதமான மதச் சடங்கும் அங்கு நடை பெறமாட்டா.

## அறிவாலயமும் அவரவர் வீடும்

அறிவாலயம் போலவே, அறிவாலயத் தொடர்புடையோர் வீடுகளும் அமையவேண்டும்.

வீடுகள்தோறும் அறிவாலயத்திற்குச் சமமாக ஒரு சிறு அறை ஒதுக்கப்பட வேண்டும். அதில் திருச்குறள் உரையுடையது ஒன்றேனும்' இருக்கவேண்டும். திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடல் காலைதோறும் ஓதப்படல் வேண்டும். மாலையில் அறத்துப்பால் குறள் ஒவ்வொன்று விளக்கப்படல் வேண்டும். சிறுவர்கள் முதல்நாள் கற்பித்ததை மனப்பாடமாய் ஒப்புவிக்க வேண்டும். அதன் பின்னரே இரவு உணவு உட்கொள்ளல் வேண்டும். பெற்றோர்கள் இதில் கவனமுடையவர்களாய் இருக்க வேண்டும்.

திருக்குறள் ஒப்புவிக்கும் பிள்ளைகளுக்குப் பரிசுகள் வழங்குதல் வேண்டும். படிக்கும் பிள்ளைகளுக்கு அவர்கள் படிப்புக்கு வேண்டிய புத்தகங்கள் முதலியன பரிசாக வழங்கப்படலாம்.

திருவள்ளுவர் அறிவு ஆலயத்துக்கு உண்டியல் சேர்க்கும் முறையும் அமைந்திருக்கலாம்.

## அறிவாலயமும் அதன் பயனும்

அறிவாலயத்தின் நோக்கம்: எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதும், அதைச் செயலாக்குவதுமாம்.

அதற்காக, அது பல பணிக் குழுக்களை அமைத்து நல்ல முறையில் அவைகளைக் கொண்டு செயலாற்றும்.

1. ஒற்றர் குழு:- இக்குழு, உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளில் மக்களுக்குத் துன்பந் தரும் நிகழ்ச்சிகளை ஆங்காங்கு அறிந்து, அங்கிருந்தபடியே அறிவாலயத் தலைமை ஆபீசுக்கு விவரமாகத் தெரிவிக்கும்.

''எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதன் வேந்தன் தொழில்.'' — தி. கு. 582.

என்னுஞ் செயலை இக்குழு மேற்கொண்டு பணிசெய்யும்.

2. உதவிக் குழு:- ஒற்றர் குழுவின் அறிக்கையைத் தலைமைச் செயலகம் விளக்கி, உதவிக் குழுவுக்கு ஆணையிடும். உதவிக் குழு துன்பம் நடைபெறுமிடத்திற்கு விரைந்து சென்று அத்துன்பத்தை நீக்க முயலும்.

''உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.'' — தி. கு. 788.

என்ற விதிப்படி இக்குழு பணிசெய்யும்.

3. அரசியல் பிணக்கு நீக்குங் குழு:-
அரசாங்கங்களுக்குள் நடைபெறும் சிக்கல்களை ஒற்றர் குழுவின் அறிக்கையின் மூலம் தலைமை ஆபீசிலிருந்து அறிந்து, அவைகளைத் தீர்க்கும் விஷயமாய் இக்குழு முயற்சி எடுக்கும் இக்குழுவின் அங்கத்தினர் தேர்ந்த அரசியல் நிபுணர்களாயிருப்பார்கள்,''

யுத்தங்கள் ஏற்படாதபடி தடுப்பதிலும் இக்குழுவினர் கவனஞ் செலுத்துவார்கள். உலக அரசாங்க மகாநாடுகளில் கலந்துகொள்ளும் உரிமை இவர்களுக்குக் கிடைக்கும்படி அறிவாலயத் தலைமை ஆபீசு நடவடிக்கை எடுக்கும்.

அகில உலகப் பொது அரசாங்கம் ஏற்படுவதைப்பற்றி அத்தகைய மகாநாடுகளில் இக்குழு எடுத்துக் கூறும்.

4. சமூகப் பிணக்கு நீக்கும் குழு:- தமிழ் நாட்டிலிருக்கும் சாதிப் பிரிவுகளால் சில வகுப்பினருக்கு இருக்கும் இன்னல்களை ஒற்றர் குழுவினரால் நன்கு அறிந்து அவற்றை நீக்கிட இக்குழு பாடுபடும்.

இதேபோல் வேறு நாடுகளில் நிற பேதத்தால் துன்புறும் வகுப்பினருக்கும் உதவி செய்ய முயலும்.

''பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'' — தி. கு. 972.

என்கின்ற மறைமொழி செயற்பட இக்குழு பெரு முயற்சி எடுக்கும்.

5. இரப்போர்க்கு இரங்கும் குழு:- தமிழ் நாட்டில் இரந்து வாழ்கின்ற மக்தள் பலர் இருக்கின்றனர். ஒற்றர் குழு அவர்களைப்பற்றிச் சரியான விவரமறிந்து, வேலை செய்யக் கூடிய உடல்வலிவு உள்ளோரை வேருயும், அவ்வாறு இல்லாதோரை வேருயுங் குறித்துத் தலைமை ஆசீசுக்குத் தெரிவிக்கும். உடல்வலிவு உள்ளோரைப்பற்றி வேலையமர்த்துங் குழுவிற்கும், அவ்வாறில்லாதோரைப் பற்றி இரப்போர்க்கு இரங்குங் குழுவிற்கும் அறிவிக்கும்.

''இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்.'' — தி. கு. 1062.

என்னுங் குறள்நெறியைக் கடைப்பிடித்து, இக்குழுவினர் முறை செய்வர். பிச்சை யெடுத்துப் பிழைக்கின்ற மக்கள் உள்ள அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டும். இரப்போர்க்கு இரங்குங் குழு அரசாங்க உதவியை நாடி அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்து உணவளிக்கத் திட்டஞ் செய்ய வேண்டும்.

6. வேலை அமர்த்திக் கொடுக்கும் குழு :- இக்குழு வேலையில்லாது சங்கடப்படுகிறவர்களுக்கு வேண்டிய உதவி செய்யும். அரசாங்கத்தில் ''வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனம்'' என்று ஒன்று இருந்தபோதிலும், அத்துடன் ஒத்துழைத்து இதுவும் தொண்டு புரியும். அறிவாலயக் கட்டடம் ஏறக்குறையப் பத்து கோடி ரூபாய் செலவில் கட்ட வேண்டியிருப்பதால் பலவகைப்பட்ட தொழிலாளர்கட்கும் அங்கு வேலை கொடுத்து உதவலாம். கட்டடத் தொடக்க காலத்திலேயே தோட்டம் போட வேண்டிய திட்டமிருப்பதால் கனிமரங்கள் உற்பத்தி செய்யுந் தொழிலிலும் ஈடுபடுத்தலாம்.

7. திக்கற்ற சிறுவர் நலன் பேணுங் குழு :- ஆதரிப்பாரற்று அலைந்து திரியுங் குழந்தைகளைக் கண்டுபிடித்து அவர்களை அறிவாலயம் கொண்டு வந்து சேர்த்து அவர்களுக்குப் பொதுக்கல்வியுந் தொழிற்கல்வியும் கற்பித்து அவர்கள் பிறர் உதவியை நாடாமல் தாமே உழைத்து வாழும் நிலைக்குக் கொண்டு வர இக்குழு பாடுபடும். அதற்கு வேண்டிய பணஞ் சேர்க்க அறிவாலயத் தலைமை ஆபீசு நடவடிக்கை எடுக்கும்.

8. நெறி தவறித் திரியுஞ் சிறுவரைப் பாதுகாக்குங் குழு :- பெற்றோரின் கட்டுக் கடங்காமல், துஷ்டத்தனத்திலுங் களவிலும் ஈடுபட்டுத் திரியுஞ் சிறுவர்களைப் பிடித்து, அவர்களைச் சிறைக்கைதிகளைப்போல் காபந்து செய்து, அவர்களுக்குப்பொதுக்கல்வியுந் தொழிற்கல்வியும் கற்பித்து அவர்களை நல்ல பிரஜைகளாக்கும் பணியை இக்குழு செய்யும்' இதற்கு வேண்டிய பணத்தைத் தலைமை ஆபீசு நல்கும்.

9. பொதுநலப் பணியில் ஈடுபட்டுப் பொருளை இழந்து ஆதரவின்றி அல்லலுறும் முதியோர்களை ஆதரிக்குங் குழு :-
ஒற்றர் குழு கொடுத்திருக்கும் அறிக்கையை நன்கு கவனித்து, மெய்யாக அவ்வாறு அல்லலுறும் பெரியோர்களை அறிவாலயத்துக்கு வரவழைத்து, அங்கே அவர்களுக்கு உணவு முதலிய வசதி செய்து, சாகுமளவும் அறிவாலயத்திலிருத்தி சிறப்பிக்கும் பணியை இக்குழு செய்யும்.

10. எச்சத்திற்கு ஏமாப்பளிக்கும் குழு :—

"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து" —தி. கு. 111.

இக்குறளுக்கு, சேலம் கல்லூரித் தலைமைப் பேராசிரியர் நடேசர் அவர்கள் "கலைக்கதிர்" 1954 ஆகஸ்டு இதழில் விரிவுரை எழுதியிருக்கிறார்கள். அதில் - அவர்கள் - உறுப்பில் குறையுள்ளவர்களை எச்சமென்று விளக்கி, நடுவுநிலைமை உடையவருடைய செல்வம், கால், கை, கண், காது போன்ற உறுப்புகளில் குறைவுள்ளவர்களுக்குப் பயன்படவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். மேலும்,

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி" —தி. கு. 118.

என்பது நீதி மன்றத்தார் நடுவு நிலையையும்,

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்" —தி. கு. 120.

என்பது வணிகர் நடுவுநிலைமையையும் குறிப்பது போல; இக்குறள் பொருளாதார நடுவுநிலைமையாகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொருளுடையோர் தாங்களாகச் செய்ய வழிதெரியாமல் இருப்பார்கள். எச்சத்திற்கு ஏமாப்பளிக்கும் குழு பொருள்வளம் பொருந்தியவர்கள்பால் சென்று பொருள் பெற்று எச்சமுடைய மக்களைப் பாதுகாப்பார்கள்.

11. மருத்துவக்குழு :— பணம் செலவுசெய்து நோய் தீர்த்துக்கொள்ள முடியாத ஏழை மக்களுக்கு இலவச வைத்தியம் செய்து அவர்கள் பிணியைப் போக்குவது இக்குழுவின் பணியாகும். ஆங்கில வைத்தியம் பயின்றவர்களும், சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யூனானி வைத்தியம்

ஹோமியோபதி வைத்தியம் ஆகிய பிற வைத்தியம் பயின்றவர்களும் இக்குழுவில் இருப்பர்.

''பிணியனைத் தனது பிள்ளைபோல் எண்ணி
அணிமொழி பேசி ஆக்கங் கூறிப்
பணுந்துணையெல்லாம் பண்ணி மருந்தீ
குணமுடை வைத்தியன் குவலயத் திறயே''

என்பதனைச் செயலாக்கும் முறையில் பணியாற்றுவர்.

12. பொதுநலக் குழு:— மேலே குறிப்பிட்டவைகள் போக வேறு ஏதேனும் நலம் செய்ய வேண்டியதிருந்தால் அவைகளைக் கவனித்துச் செய்ய இக்குழு காத்திருக்கும்.

13. அறிவியல் குழு :— இக்குழு கல்லூரியில் நல்ல விதமான கல்வி கற்பிப்பதற்கும், என்னென்ன வகைகளில் மக்கள் அறிவடைய வேண்டியது நலமென்று தெரிகிறதோ அவ்வகைகளில் அறிவைப் புகட்டுவதற்கும் இக்குழு காத்து இருக்கும்.

## அறிவாலயமும் கனிமரங்களும்

அறிவாலயக் கட்டடம் கட்டத் தொடங்கும்போதே இக்காரியம் தொடங்கப்படல் வேண்டும்.

கன்னியாகுமரி நாடே தேர்ந்தெடுக்கப்பட்டால், கடல் தண்ணீரை நல்ல தண்ணீராக்கும் இயந்திரம் வைத்து, நல்ல தண்ணீராக்கி, கட்டட வேலைக்கு அதைப் பயன்படுத்துவதுடன் கனி மரங்களுக்கும் பயன்படுத்தலாம். அறிவாலயச் சுற்று மதிலுக்குள் பலவகைப்பட்ட கனிமரங்களைத் தொடக்கத்திலேயே நட்டுவளர்த்தால் கட்டடங்கள் கட்டித் தீருவதற்குள் மரங்கள் கனி கொடுக்கத் தொடங்கிவிடும். அறிவாலயம் ஒரு சோலைக்குள் இருப்பதாகக் காட்சியளிக்கும். கி. பி. 1970-ல் திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவு விழா நடைபெறும்போது திருவள்ளுவர் அறிவு ஆலயம் ஒரு அழகிய மரங்களடர்ந்த நகரம் போல் தோன்றும். அயல் நாட்டவர் பார்த்து வியப்படைவர்.

## அறிவாலயமும் அதற்குரிய நிதியும்

அறிவாலயம் அளவிலும், தன்மையிலும் உலக அதிசயங்களில் ஒன்ருகவும், மற்றவைகளுக்கு அரசாகவும் விளங்கவேண்டுமானல், தமிழ்நாடு மட்டுமன்று, பரத கண்டம் மட்டுமன்று, ஐந்து கண்டத்தினரும் கலந்து செய்யவேண்டும். அகில உலக ஆதரவு வேண்டும்.

இம்மாபெரும் நினைவுச் சின்னம் அமைக்கக் குறைந்தது பத்துக்கோடி ரூபாயாவது வேண்டும். அவ்வளவு செலவுசெய்து கட்டிமுடித்துச் செயல்படும்போது கணித்தோமானல், முப்பது கோடி ரூபாய்க்கு மதிக்கக்கூடியதாயிருக்கும். அதன் நோக்கப் படி - செயல் ஆகி - எல்லோரும் இன்புற்றிருக்க வழிசெய்து விட்டால், அதன் மதிப்பை எவராலும் கணிக்கமுடியாது. அது உலகப் பொதுமக்கள் சொத்தாகவே என்றும் நின்று நிலவும். இன்ப நிலையை உறுதி செய்வதே அதன் கடமையாகும்.

இப்பெரிய நிதியைச் சேர்ப்பது கடினமான காரியம் தான். ஆனல், முடியாத காரியமன்று.

''முயற்சி திருவினை ஆக்கும்''-தி. கு. 216; ''எண்ணிய எண்ணியாங் கெய்துப'' — தி. கு. 666; ''ஞாலங் கருதினும் கைகூடும்'' — தி. கு. 48 என்றெல்லாம் வள்ளுவர் உறுதி கூறுகிருர். ஒருவர் கருத்துக்கே இவ்வளவு உயர்வு வாய்க்கு மானல், உலகப் பெரியோர்கள் பலர் கருதுவார்களானல், பத்துக் கோடி ரூபாய் சேர்ப்பது ஒரு பெரிதாகாது.

## அறிவாலய நிதியும் மாகாண அரசாங்கக் கடமையும்

தமிழ்நாட்டு அரசாங்கமாகிய சென்னை அரசாங்கம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில்-திருவள்ளுவர் அறிவாலயத் திற்கு நிதி சேர்க்கும் காரியத்தையும் சேர்த்துக்கொண்டு சர்க்கார்

கஜானக்களில் அதற்கு ஒரு கணக்குப் போட்டு, நன்கொடைத் தொகைகளை வரவேற்றுப் பெருக்கி வரவேண்டும்.

நிதி அமைச்சர் - இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்தி நிதி சேர்க்கும் வழி செய்யவேண்டும்.

பொதுமக்களின் நல்வாழ்வுக்காக - எல்லோரும் இன்புற்றிருக்கச் செயல்புரியும் திட்டத்திற்காக நிதி சேர்ப்பது - மக்கள் நல்வாழ்வை விரும்பும் அரசாங்கத்திற்கு விருப்பத்தை உண்டாக்காமற் போகாது. அரசாங்கம் செய்யவேண்டிய காரியங்களின் ஒரு பகுதியே இதுவாதலால், அத்தகைய அரசாங்கம் இதை வரவேற்று ஆதரவு செய்யவே விரும்பும்.

## அறிவாலய நிதியும்
## *மத்திய அரசாங்கக் கடமையும்*

திருவள்ளுவர் தமிழ் நிலத்தவர்; அதேபோல பரதகண்டத்தவர் - இந்தியர். அவர் பெயரால் செய்யப்படும் காரியத்திற்கு மத்திய அரசாங்கமும் ஆதரவளிப்பது கடமையாகும். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திருவள்ளுவர் அறிவாலயம் பற்றிய செயலையும் சேர்த்துக் கொண்டு - சென்னை அரசாங்கத்திற்கு அனுமதியளிப்பதுடன், மத்திய அரசாங்கச் சார்பில் பொருள் ஒதுக்கி அதைச் சென்னை அரசாங்கத்தின் வாயிலாக அளிப்பது சாலச் சிறந்ததாகும்.

அறிவாலயம் கட்டப்பட்டு, அதன் திட்டப்படி செயலாகுமாளுல் தமிழ்நாட்டுக்கும், தமிழ் மாநில அரசுக்கும், இந்தியாவுக்கும், இந்தியப் பேரரசுக்கும் வெளியுலகப் பெரும் புகழ் வருவது திண்ணம்.

## அறிவாலய நிதியும்
## தமிழ்ப் பெருமக்கள் கடமையும்

தமிழ் மகனுகிய திருவள்ளுவர் உலகத்திற்கே நன்னெறி வகுத்துக் கொடுத்திருப்பதன் பயனுக உலகமே தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் போற்றுகிறது; புகழ்கிறது. அதனுல் திருவள்ளுவர் அறிவாலய நிதிக்குப் பொருள் வழங்குவதில் தமிழ் மக்களே முன்னணியில் நிற்கவேண்டும்.

மேலும் இந்திய யூனியனைச் சேர்ந்த மற்ற ராஜ்யங்களில் நிதி திரட்டுவதற்கும் தமிழ் மக்கள் முன் வரவேண்டும். தமிழ் நிலத்திலேயே இம்மாபெரும் அறிவாலயம் கட்டப்படுவதால் தமிழ்நாட்டுக்கே அது கிரீடமாக விளங்கும்.

திருவள்ளுவருக்கு - அவர் அளித்த மாபெரும் கொடைக்குச் சரியான நன்றி செலுத்த இதுவரை மறந்து விட்டோம். இப்பொழுதாகிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதின் மூலம் சரியான நன்றி செலுத்தி நம் கடமையை முடித்துக்கொள்வோமாக.

## அறிவாலய நிதியும்
## அகில உலக பெருமக்கள் கடமையும்

திருவள்ளுவர் தமிழ் நிலத்துக்குரியவராயிருந்தாலும் அவர் உலக மக்களை முன்னிறுத்தியே வாழ்க்கை விதி அமைத்துக் கொடுத்தவர். ஆகையால், அவர் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவர். அவருக்கு நன்றி செலுத்தும் முறையில் ஒரு மாபெரும் ஆலயம் கட்டி, அதன் வாயிலாக உலக மக்கள்

அனைவரும் இன்புற்றிருக்குமாறு திட்டம் செய்யும் காரியத்திற்கு அகில உலக மக்களும் நிதி வழங்குவது கடமையே.

மேலும், " திருவள்ளுவர் அறிவு ஆலயம் " என்று அதற்குப் பெயர் கொடுத்திருந்தாலும், அதில் உலக மேதைகள், மக்கள் நல்வாழ்வுக்காக உழைத்து இளைத்து மாய்ந்த மகான்கள் அனைவருக்கும் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தும் திட்டமிருப்பதால் எல்லா நாட்டு மக்களுக்கும் அவ்வாலயம் பொதுவானதே.

ஆகையால், எல்லா நாட்டு மக்களும் திருவள்ளுவர் அறிவு ஆலயத்திற்கு நிதி வழங்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## அறிவாலய நிதியும்
## அன்பர்கள் கடமையும்

திருக்குறள் அன்பர்கள் தங்கள் தொடர்புடையவர்களுக்கு எழுதுங் கடிதங்களில் அறிவாலயம் பற்றியும், அறிவாலய நிதி பற்றியும் எழுத மறக்க மாட்டார்கள். வியாபாரத் தொடர்புடையவர்கள் தங்களிடம் கொள்முதல் செய்யும் சிறு வியாபாரிகளிடம் இந்நிதியைப் பற்றி எடுத்துக்கூறி ஒரு விகிதம் வாங்கிச் சேர்க்கலாம். மொத்த வியாபாரம் செய்யும் அன்பர்கள் விற்ற சரக்குகளின் பேரில் ரூபாய்க்கு இன்ன விகிதம் என்று போட்டு திருவள்ளுவர் அறிவாலயத்திற்கு நிதி சேர்க்கலாம்.

திருக்குறள் ஆராய்ச்சிக் கூட்டங்களை நடத்துபவர்கள் தங்கள் தொடர்புடையவர்களுக்கு இந்நிதியைப் பற்றி எழுதுவார்கள்; சொல்லுவார்கள்.

## அறிவாலய நிதியும்
## *ஆலயப் பக்தர்கள் கடமையும்*

நம் நாட்டுச் சமய ஆலயங்களைப் பற்றி சாமி சகஜானந்தம் அவர்கள் - ஆலய விதிகளைப் பற்றிய பூர்வீக நூல்களிலிருந்து ஆதாரங்காட்டி, ஒரு பிரசுரம் வெளியிட்டிருந்தார்கள்.

வீட்டில் ஒவ்வொருவரும் தனியாக ஒரு அறையை ஒதுக்கி கடவுள் வழிபாட்டுக்கு அதைப் பயன்படுத்தவேண்டுமாம். அவ்வித வசதியும், அவகாசமும் இல்லாதவர்கள் தான் ஆலயத்தில் போய் வழிபட வேண்டுமாம். வீட்டில் சாப்பிட வசதியில்லாதவர்களுக்கு அன்ன சத்திரத்தில் சாப்பாடு போடுவது போல, வீட்டில் கடவுள் வழிபாடு செய்துகொள்ள வசதியில்லாதவர்களுக்காகவே ஆலயம் கட்டப்பட்டதாம். அதற்கு நேர்மாருக பிற்காலத்தில் ஏழைகளுக்கு ஆலயத்தில் இடமில்லாமற்போனதாக சரித்திரத்தில் அறிந்தோம். இப்போது மகாத்மா காந்தியின் முயற்சியால் எல்லோரும் போய் வழிபடச் சட்டம் செய்யப்பட்டு இருக்கிறது.

இப்போதிருக்கும் ஆலயங்கள் மக்களிடம் ஒற்றுமையை வளர்க்கவும், சாதிபேதங்களைக் குறைக்கவும், மக்களிடம் இருக்கும் குறைபாடுகளைத் தீர்க்கவும் பயன்படவில்லை என்று பல அறிஞர்கள் கூறுகின்ருர்கள். இக்குறைபாடு இந்து சமய ஆலயங்களைப் பற்றி மட்டுமல்ல, கிறிஸ்து சமய ஆலயங்கள், இஸ்லாமிய ஆலயங்கள் அனைத்தையும் பற்றிச் சொல்லப் படுகிறது.

கடவுள் பேராலும், சமயங்கள் பேராலும் சுயநலமிகளின் சூழ்ச்சிகள் மிகுதிப்பட்டிருக்கின்றனவென்றும், அதனுல்தான் நன்மைக்காகத் தோற்றுவிக்கப்பட்ட அவைகள், அது செய்ய முடியாமற் போனதுமல்லாமல் அதற்கு மாருனவைகளைச் செய்யும்

படியான நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருக்கின்றனவென்றும் இன்னொரு சாரார் கூறுகின்றார்கள்.

திருவள்ளுவர் அறிவு ஆலயமோ - மக்கள் குழுவில் காணப்படும் குறைகள் அனைத்தையும் தீர்த்து எல்லோரும் இன்புற்றிருக்க வழி செய்யும்.

நம் முன்னோர்கள் பிரமாண்டமான ஆலயங்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அவர்கள் புகழ் இன்றும் நின்று நிலவு கிறது. ஆனால், அவர்கள் நோக்கத்திற்கு மாறுபட்ட நிலை இப்போது ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

எனவே ஆலய பக்தர்கள் சற்று தளர்ச்சி அடைந்து இருக்கின்றனர். இப்போது ஏற்படவிருக்கும் திருவள்ளுவர் அறிவு ஆலயமோ எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை ஏற்படுத்தும் திட்டம் கொண்டது. அனைவரும் இவ்வறிவாலயம் கட்டும் பணியில் ஈடு படுவார்கள். அன்பர் பணி செய்து இன்பம் அடைவார்கள்.

ஆலயங்களுக்குக் கொடுக்கும் காணிக்கைகளை எல்லாம் திருவள்ளுவர் அறிவாலய நிதிக்குக் கொடுத்துப் பெரும் புண்ணி யம் தேடிக்கொள்வார்கள்.

## அறிவாலய நிதியும்
## *பத்திரிகை ஆசிரியர்கள் கடமையும்*

''திருவள்ளுவர் அறிவு ஆலயம்'' என்னும் இச்சிறு நூல் பற்றி மதிப்புரை எழுதுவதுடன், 'திருவள்ளுவர் அறிவாலய நிதி' திரட்டும் பணியிலும் அவர்கள் ஈடுபட்டுப் பெரும் புகழ் அடை வார்கள்.

மேலும், ''திருவள்ளுவர் அறிவு ஆலயமும் அதன் திட்டங்களும்'' என்னும் பொருள்பற்றித் தலையங்கம், உபதலையங்கம் முதலியன எழுதி மக்களைத் தட்டியெழுப்புவதும் அவர்கள் கடமையாகும்.

## அறிவாலய நிதியும் *மாணவர்கள் கடமையும்*

அறிவாலய நிதிக்கு மாணவரும் உதவலாம். பெற்ரோர்களிடம் கேட்டு வாங்கும் பணத்தில் ஒரு பகுதியை உண்டியலில் போட்டு வைத்திருந்து சேர்த்துக் கொடுக்கலாம்.

## அறிவாலய நிதியும் *ஆசிரியர்கள் கடமையும்*

பாடசாலை ஆசிரியர்கள் மானேஜ்மெண்டின் உத்தரவு பெற்று, வகுப்புகள் தோறும் உண்டியல் கலசங்கள் வைத்துத் திருவள்ளுவர் அறிவாலயத்திற்கு நிதி சேர்க்கலாம்.

## 'அறிவாலய நிதியும் *அயல்நாடுகளில் வதியும் தமிழ்ப் பெருமக்களும்*

தமிழ்நாட்டில் வசிக்கும் தமிழ் மக்களைவிட அயல்நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழ் மக்கள் தமிழ்ப்பற்றிலும், தமிழ்

நாட்டுப்பற்றிலும் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்பது வெளிப்படை.

ஆதலால், திருவள்ளுவர் அறிவு ஆலயம் கட்டு முயற்சியை அவர்கள் பாராட்டுவார்கள்; ஊக்குவார்க அறிவாலய நிதிக்குப் பொருள் அளிக்கும் செயலை அவர்க தாங்களாகவே மேற்கொள்வார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை

இந்திய யூனியனைச் சேர்ந்த அயல் மாகாணங்கள் வாழும் தமிழ் மக்களைப் பற்றியும் அவ்வாறு கொள்ளுதல் கூடு பம்பாய் வாழ் தமிழ் மக்கள் இதில் முன்னணியில் நிற்பர்.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேயா முதல் வெளிநாடுகளில் வசதியும் தமிழ்ப்பெருமக்களும், இ திருப்பணியில் பங்கு கொள்வதில் பின்னடையார்க என்பது உறுதி.

# முடிவுரை.

## பெரியோர்களின் அறிவுரைகள் வேண்டப்படுகின்றன:—

திருவள்ளுவருக்கு ஒரு மாபெரும் ஆலயம் அமைத்து அதன் வழியாக அப்பெரியாருக்கு நன்றி தெரிவிக்கும் திருப்பணியை, என் சிற்றறிவுக்கு எட்டியமட்டும் இச் சிறு நூலில் எடுத்துக் கூறியிருக்கின்றேன். தங்கள் பேரறிவின் முன் என் கருத்துக்களை வைத்துச் சிந்தித்தால் இன்னும் உயர்ந்த கருத்துக்கள் தங்களுக்குத் தோன்றும்.

அவைகளை உரைவடிவிலோ, காவிய வடிவிலோ, ஓவிய வடிவிலோ தீட்டி எனக்கு அனுப்பினால், அவை களை அவரவர் பெயர்களுடன் தொடர்புபடுத்தி, அடுத்த பதிப்பில் சேர்த்து வெளியிடத் தயாராயிருக்கின்றேன். அவ்வெளியீட்டால் ஈட்டப்படும் நிகரலாபத்தில் ஒரு பகுதியைத் திருவள்ளுவர் அறிவு ஆலய நிதியில் சேர்த்து விடுவதாகவும் உறுதி கூறுகின்றேன்.

**அறிவுத் தாய் தந்தையர் தேவை:–** யான் ஆண்டிலும், அறிவிலும் இளைஞன். எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை செயலில் அமையவேண்டும் என்பது என் பேரவா.

அவ்வவாவே, என்னை இந்நூலாக்கும் பெரும்பணிக்கு உந்திற்று. இது போன்ற பல பணிகள் செய்தேனும் அந்நிலையை மக்கள் அடையவேண்டும் என்பது என் வாழ்க்கைக் குறிக்கோள்.

எனது இக்குறிக்கோளுக்கு இணங்கிய அறிவுரை களும், செயல்திட்டங்களும் எனக்குப் புகட்டிவர 55 வயதைத் தாண்டிய–பேரறிவும் பெருநோக்கும் கொண்ட தாய் தந்தையர் வேண்டும்.

இச்சிறு நூலைப் பார்க்க அல்லது கேட்க வாய்ப்புப் பெற்ற பெரியோர்கள் என் வேண்டுகோளை நன்கு மதித்து என்னை அறிவு மகனாக (மானத புத்திரன்) ஏற்று அறிவு புகட்டிவர அன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

ப, இராமசாமி.

# பிழை திருத்தம்

*

அச்சகத்தாருடைய ஒத்துழைப்புடன் இயன்றவாறு முயன்று ஒத்திகை பார்த்தும் சில பிழைகள் புகுந்துவிட்டமைக்கு வருந்துகிறோம். முதலில் திருத்தம் போட்டுக்கொண்டு வாசிக்குமாறு வாசகர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 13 | 29-5-'60 | 29-5-'59. |
| 22 | 1 | தருமயிலை | திருமயிலை |
| ,, | 10 | மாயயது | மாயாது |
| 27 | 2 | அவைகளிலிருஇது | அவைகளிலிருந்து |
| 47 | 17 | வெள்ளி தியார் | வெள்ளிவீதியார் |
| 50 | 13 | சய்கையுஞ் செய்யும் | செய்கையுஞ் செய்யும் |
| 63 | 12 | தவத்வொடு | தவத்தொடு |
| 68 | 7 | இருக்கப்பெற்றும் | இருக்கை பெற்றும் |
| ,, | 17 | வேறு ஒன்றும் | பேறு ஒன்றும் |
| 76 | 17 | சித்தரிக்க | சித்திரிக்க |
| 86 | 13 | சான்ேறார்க்கனி | சான்றோர்க்கணி |
| 87 | 6 | குவலயத்திறயே | குவலயத்திறையே |
| 88 | 19 | 48 | 484 |

—குறளமுது பதிப்பகத்தார்.